என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்


ஆண்டு ராசிபலன் உள்ளே

April 2016 FREE ISSUE

# லண்டன் தமிழர் தகவல்


## London Tamil's Information

## 90 அகவையில் மேன்மைமிகு மகாராணி



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

**லட்சுமி ஜுவலர்ஸ்**

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


இசை ஆற்றலும்
இரக்கமும் மிக்க
இசை வித்தகி
சிவசக்தி
சிவநேசன்



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2047

பங்குனி

மலர் : 13

இதழ் : 155

ஏப்ரல் - 2016

முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல சோறு சாப்பிட AMIRTAA அரிசி வாங்குங்கள்

UNLEASH
THE POWER OF GOLD
THARANI



JEWELLERY & PAWNBROKERS
UK'S CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD LOANS

THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Aqainst Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest

£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%


Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


BRINGING GREAT FOOD TO LIFE...
Nelli
ORANGE SODA
Quento
NO 1 Brand
BRAND Niru
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk




லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

# AMIRTAA

AMIRTAA

## 'நல்ல சோறு'




லண்டனில்

**AMIRTAA**

பொன்னி புழுங்கல் அரிசி
விற்பனை ஆகும் இடங்கள்

**Harin Supermarket**
Eastham

**Katpakam**
Lewisham

**Eelam Shop**
Catford

**Krishna Stores**
Hayes

**Prime Food & Wine**
Tooting

**Best Food**
Wembley

**Best Food**
Hounslow

**Best Food**
West Croydon

**Harrow Food & Wine**
Harrow

## இப்பொழுது விற்பனையில்...

அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம் வழங்கும்

# திருக்குறள் போட்டி

தினம் ஒரு திருக்குறள், 365 தெரிவு செய்யப்பட்ட குறள்கள் மனப்பாடம் செய்து தமிழர் தகவல் மூலம் தெரியப்படுத்தினால் - சிறப்பு பரிசாக

**முதல் பரிசு**
பவுன் 200.00

**இரண்டாம் பரிசு**
பவுன் 100.00

**மூன்றாம் பரிசு**
பவுன் 50.00




## 365 அடங்கிய

திருக்குறள் புத்தகத்தை போட்டியில் கலந்து கொள்பவர்கள்

## இலவசமாக

பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு: தமிழர் தகவல்
லண்டன்



# நலமுடன் வாழ வாழ்த்துகள்

## Elizabeth II

(Elizabeth Alexandra Mary; born 21 April 1926)





தமிழகத்தில் பிள்ளைகளின் பிரதேசம் நூல் வெளியீட்டு விழாவில் ஆசிரியர் பங்கேற்றபோது

# என் கடன் பணிசெய்து கிடப்பதே

தமிழர் தகவல் வழியாக நான் வெளிப்படுத்தி வரும் கருத்துகள், உரியவர்களின் கவனத்திற்குப் போய்ச் சேர்ந்த போதும், அதை அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை. நீ என்ன சொல்வது நான் என்ன கேட்பது என்ற போக்கே தொடர்கிறது. நல்லதை யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ளலாம் தவறில்லை என்னும் உபதேசம் பிறருக்குத்தான் போலும். எந்த இடத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், நம்முடைய இனம், மொழி, சமயம் ஆகியனவற்றின் மேம்பாட்டையும், நலனையுமே முன்னிறுத்தி வருகிறேன். புலம்பெயர்ந்த மக்களின் வழிபாட்டு முறைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது, சைவ மக்களாகிய நம்முடைய அடையாளத்தை இழந்து விடக் கூடாது என்னும் அக்கறையினாலும், கவலையினாலும்தானே ஒழிய, அதில் என்னுடைய சொந்த நலன் துளியும் இல்லை என்பதை மனச்சான்றுள்ளவர்கள் அறிவார்கள். அதே போல, ஈழ விடுதலைப் போர் குறித்தும், தலைவர், போராளிகள் குறித்தும் நான் பேசுவதும், எழுதுவதும் நம்முடைய உரிமையை; நன்றி மறவாத தமிழனின் பண்பை நினைவூட்டுவதற்குத்தான். சமயமும், விடுதலைப்போரும் என் இரு கண்கள் என்று சொல்லிக் கொள்வதில் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன். அவற்றை முன்னிறுத்தியே என்னுடைய இதழ் பணியும் நடைபெற்று வருகிறது.

ஆனால் இவைகள் எதையும் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்கள் பழைய கதையே தொடரட்டும் என்று நினைக்கிறார்கள். 'செவிடன் காதில் ஊதிய சங்கு' என்றுகூட இவர்களின் போக்கைச் சொல்ல மாட்டேன். காரணம், செவித்திறன் இல்லாதவர்களுக்குக் கூட எழுதியும், சைகை செய்தும் நாம் சொல்ல வருதைப் புரிய வைத்துவிட முடியும். மாறாக, காதையும், கண்ணையும், கருத்தையும் சேர்த்தே மூடிக்கொள்கிறவர்களுக்கு எப்படிப் புரிய வைப்பது? இவர்களை நினைக்கும்போது,

"குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழி விழுமாறே"

என்ற திருமூலரின் திருமந்திர வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன. போகட்டும், அதே திருமூலர் சொன்ன,

"என்னை நன்றாக இறைவன் செய்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"


என்ற திருமந்திர வரிகளை நான் வரித்துக் கொண்டுள்ள காரணத்தால், என் கடன் பணி செய்து கிடப்பதே.

### தமிழ்நாட்டின்
# அடுத்த முதல்வராக யார் வரவேண்டும்?

இரவி அருணாசலம்

கலைஞரை, ஜெயலலிதாவை, வைகோவை இன்னும் மற்றும் பிறத்தாரை, அவர் இன்னார் என்று தெரிகின்ற பக்குவம் வந்துவிட்டது. அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரிகிறது. என்ன செய்ய மாட்டார்கள் என்றும் தெரிகிறது. இவர்கள் எவரும் தமிழ் நாட்டு மக்களுக்கு உருப்படியாக எதுவும் செய்யவில்லை. செய்யப்போவதுமில்லை. தமிழ்நாட்டு மக்கள் மீது படர்ந்திருக்கின்ற இருள் இப்பொழுது விலகுவதாக இல்லை. அந்த விளக்கத்துடனும், தெரிதலுடனும், புரிதலுடனும், அறிதலுடனும் ஒரு கருத்தை முன் வைக்கின்றேன். தமிழ்நாட்டு ஆட்சிக் கட்டிலில் ஏறி அமரப் போவது யார்? இருவர் மீது மாத்திரமே அனைத்து சுட்டு விரல்களும் நீள்கின்றன. கருணாநிதி, ஜெயலலிதா, மற்றவர்களுக்கான சந்தர்ப்பம் இல்லை என்பது வெளிப்படையாக தெரிந்த ஒன்று.

சரி, கருணாநிதி, ஜெயலலிதா இவர்களில் யார் முதல்வராக வரவேண்டும்



என்று என்னைக் கேட்டால் ஜெயலலிதா முதல்வராக வரக்கூடாது என்றே என்பதில் வெளிவரும். கருணாநிதியே முதல்வராக வரவேண்டும் என்பதே என்பதிலின் உட்கிடக்கை என உங்களைப் போல நானும் புரிகின்றேன். ஆனால், தவிர்க்க முடியாதது, அது கருப்பு, வெள்ளை என்ற வண்ணங்களே தமிழ்நாட்டில் உள்ளன. இடையில் சாம்பல் நிறம் தமிழ்நாட்டு அரசியலில் இல்லை.



ஒரு வித்தின் மூலம் அரசியல்வாதியாகி, இன்னொரு விபத்தின் மூலம் முதலமைச்சரானவர் தான் ஜெயலலிலதா. ராஜீவ்காந்தியின் கோர மரணத்தின் அநுதாபவாக்குகளே கொங்கிரஸ் கட்சி அறுவடை செய்யாமல் அப்படியே ஜெயலலிதாவிடம் தாரை வார்த்தது. அது மாத்திரம் நடந்திராவிடின், ஜெயலலிதா இப்போதும் முதலமைச்சராகவும் இல்லை அரசியலிலும் இல்லை. ஆனால், அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். ஒரு கீரைக்கடை, புல், புழு, பூச்சி நிறைந்து அழுகல் கீரைகளை விற்றுக் கொண்டிருக்கும். அதேசமயம் ஜெயலலிதா அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தால் கருணாநிதிக்கு ஒரு மாற்று பலமானதாகவும் அமைந்திருக்கும். யார் கண்டார்கள். அது வைகோவாகவும் இருந்திருக்கலாம். அந்த அரிய சந்தர்பபத்தை தவற விட்டனர் தமிழ்நாட்டு மக்கள்.

சந்தர்ப்பத்தை தவறவிட்டது தமிழ் நாட்டு மக்கள் மாத்திரமல்ல, வைகோவும் கூடத்தான். நியாயமான காரணங்களுக்காக வைகோ தி.மு.க.வை விட்டு நீங்கினார் அல்லது நீக்கப்பட்டார். தன் மகனுக்கு முடிசூட்டுவதற்காக கருணாநிதியால் காட்டுக்குத் துரத்தப்பட்டவர் வைகோ., ம.தி.மு.க. வை வைகோ ஆரம்பித்தது எல்லாம் சரிதான். கறை படியாக் கரங்கள் அவருடையவை. கடும் உழைப்பு, தொண்டர்களுடன் அணுக்கம், கம்பீரம் யாவும் இணைந்து தமிழ்நாட்டை கட்டியாளக் கூடியவர் வைகோ என்ற கற்பனையை எம்மிடையே விதைத்தது. கருணாநிதி மீதான எமது அவநம்பிக்கைகளினால் வைகோ மீது பெரும்நம்பிக்கை கொண்டோம்.

வைகோ அப்படியே இருந்திருக்க வேண்டும். அதே கம்பீரத்துடன் விட்டுக் கொடுக்கா வீரத்துடன். நிச்சயமாக தமிழ் நாட்டில் மகத்தான சக்தியாக வளர்ந்திருப்பார் வைகோ. எப்போது அவர் ஜெயலலிதாவிடம் சரணாகதி அடைந்தாரோ, எப்போது அவர் எதையும் புரட்டாத ஒருவரை புரட்சித் தலைவி என்று அழைத்தாரோ அந்தக்கணம் அவர் தமிழ் மக்களின் நெஞ்சிலிருந்து இறங்கத் தொடங்கினார். அவரது கம்பீரம் உருக்குலைந்து போனது. உண்மையில் அக்கணம் நான் நம்பினேன் நமது தேசியத் தலைவரை உச்சியில் வைத்துக் கொண்டாடுவது எல்லாம் நடிப்போ என்று. தலைவர் பிரபாகரனை புகழ்ந்த அதே வாய் தானே, ஜெயலலிதாவை புரட்சித் தலைவி என்றது.

இப்போது வைகோ இன்னும் இறங்கிப்

போவதனைப் பார்க்கமிக மிக அசிங்கமாக இருக்கின்றது. "கப்டன் விஜய்காந்த் நமது முதல்வர் வேட்பாளர்" என்று அறிவிக்கிறார் வைக்கோ. ஒரு சிங்கம் சிறு எலியின் முன் பவ்வியமாக எதிரில் குனிந்து நிற்கும் மர்மம் எனக்குப் புரியவில்லை. தம்பி பிரபாரகன் என்று ஆசை தீர அழைத்த வாய், கப்டன் விஜயகாந்த் என்று முழங்குவதைப் பார்க்கிறபோது என்னளவில் சிற்றெலியாகக் குன்றிப் போகிறார் வைகோ. அந்தக் கம்பீர மனிசனை எப்போது காண்பேன் இனி?




ஈழமக்கள் மத்தியில் கருணாநிதிக்கு இருக்கும் அவப்பெயர் இப்போதைக்கு நீங்குகிறபாடாக இல்லை. 2009 மே மாத ஈழத்தமிழர் இனப்படுகொலை நிகழ்ந்த வேளை கருணாநிதி நடந்து கொண்ட விதமே அதன் காரணம். யாவரும் சொல்கின்ற ஒரு விடயம், தனது கட்சியின் அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களையும், பதவி விலகச் செய்திருக்க வேண்டும் என்பது. இந்திய மத்திய கூட்டாட்சியில் இருந்து விலகியிருந்திருக்க வேண்டும் என்பது மற்றையது. கருணாநிதியின் உண்ணாவிரத நாடகம் தான் யாவரையும் எரிச்சலும் அருவையும் அடையச் செய்தது. தமிழ்நாட்டில் எழுந்த அனைத்துவகைப் போராட்டத்தையும் இரும்புக்கரம் கொண்டு அடக்கியமை போன்றன கருணாநிதி மீது படர்ந்த கழுவப்பட முடியாத கறை எனலாம்.


யாவற்றுக்கும் ஒற்றைக் காரணம் உண்டு. கருணாநிதி தன குடும்ப நலன்மீது கொண்ட அதீத அக்கறை.

ஆனால் நாமும் ஒன்றை மறந்தும் மறுத்தும் விடுகிறோம். கருணாநிதி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தாலும்கூட, மத்திய அரசு, சிங்கள அரசுடன் இணைந்து தமிழர் மீது இனவழிப்புப் போரை நிகழ்த்தியே இருக்கும். நாம் எமது கையாலகத்தனத்தினை கருணாநிதி மேல் சுமத்தி ஒதுங்கிப் போகிறோம்.

மறுபுறம், இனவழிப்புப் போர் நிகழ்ந்த சமயம் ஜெயலலிதா சொன்ன

ஒன்றை நாம் மறுந்துவிடலாகாது. 'போர் ஒன்று நிகழ்ந்தால் பொதுமக்கள் கொல்லப்படத்தானே செய்வார்கள்' இந்த வாக்கியம் ஹிட்லர், முசோலினி





போன்றோர் உரைக்கும் வாக்கியத்துக்கு ஒப்பானது. பிராமணியக் கருத்துநிலை கொண்ட ஒரு பெண்ணால் அவ்வாறுதான் உரைக்க முடியும். சோ, இந்து ராம், மாலன் போன்றோர் உரைக்கும் வார்த்தை அது. அதற்கு முன்னால் கருணாநிதி பாதி உண்ணாவிரதம் இருந்தது ஒன்று மோசமானது அல்ல. யாவும் இருக்கட்டுமன்.

தமிழ்நாட்டின் அடுத்த முதல்வராக யார் வரவேண்டும்? வைகோவோ சீமானோ முதல்வர் ஆக வரப் போவதில்லை. விஜயகாந்த் வரவே வேண்டாம். கருணாநிதி, ஜெயலலிதா யார் வரவேண்டும்? அல்லது யார் வரக்கூடாது? ஜெயலலிதா வரக்கூடாது என்பேன். காரணம்:

பிராமணிய சக்திகளின் கூட்டு உரு அவர் எதேச்சதிகாரி. தமிழ்த் தேசியத்தின் முக்கிய எதிர்சக்தி. பெரும் ஊழல்வாதி. ஜனநாயக அரசியலைக் காலில் போட்டு மிதிப்பவர். மக்கள் வழங்கும் நம்பிக்கைக்குத் துளியும் பொறுப்பாளி ஆகாதவர். பிராமணிய சக்திகளைத் தவிர வேறெவரையும் மதியாதவர். மத்திய அரசாங்கத்துடன் போராடியோ ஒத்துழைத்தோ தமிழ்நாட்டுக்கான உரிமைகளைப் பெறாதவர். பொது மக்கள் மீது கிஞ்சிற்றும் அக்கறை அற்றவர். மக்களின் மூட நம்பிக்கைகளையும் சீரழிவுக் கலாசாரங்களையும் நிறுவனரீதியாக வளர்ப்பவர். கட்சியில் திராவிடத்தின் பெயரை வைத்துக் கொண்டு திராவிடத்திற்கு எதிரான பணி புரிபவர். 'தான்' எனும் தனி ஒருத்திக்காகவே 'இந்த உலகம்' எனும் இறுமாப்புக் கொண்டவர். மேலாக, அனைத்து மக்கள் திரளுக்கும் மேல் அடக்குமுறையினை ஒடுக்கு முறையினை ஏவி விடுபவர்.

இனியும் அவர் முதல்வரானால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் இன்னும் பன்மடங்காகப் பெருகும்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் பல கருணாநிதிக்குமம் பொருந்துகின்றன. கவனியுங்கள். முழுமையும் அல்ல பல என்றே சொன்னேன். அப்போ யார் முதல்வராக வரவேண்டும்?

பதட்டப்படாத என் பதில் இதுதான். கலைஞர் கருணாநிதி.

நன்றி : ஒருபேப்பர்

# இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் 90வது பிறந்தநாள்

இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத், 1926ம் ஆண்டு ஏப்ரல் 21ந் தேதி பிறந்தார். அவருடைய தந்தையும், மன்னருமான ஆறாம் ஜார்ஜ் 1952ம் ஆண்டு மறைந்த பிறகு, எலிசபெத் ராணியாக பொறுப்பேற்றார். இங்கிலாந்தில் அதிக காலம் அரச பதவியில் இருப்பவர் இவரே ஆவார்.

ராணி எலிசபெத்துக்கு நேற்று 90வது பிறந்தநாள். அவரது பிறந்தநாள், இங்கிலாந்து முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

நாட்டின் பல பகுதிகளில், துப்பாக்கி குண்டுகள் முழங்க கொண்டாட்டம் நடைபெற்றது. வாண வேடிக்கைகளும் இடம்பெற்றன.



ராணி எலிசபெத், விண்ட்சர் அரண்மனையில் தங்கி இருந்தார். காலையில் அவர் நகர்வலம் சென்றார்.

ராணி பிறந்தநாளை முன்னிட்டு, இங்கிலாந்து பாராளுமன்றம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. சிவப்பு, வெள்ளை, நீல நிற விளக்குகளால் இரவு நேரத்தில் ஜொலித்தது. பாராளுமன்ற பொதுச்சபை கூட்டத்தில், பிரதமர் டேவிட் கேமரூன் உள்ளிட்டோர் ராணிக்கு வாழ்த்து மழை பொழிந்தனர்.

ராணி பிறந்தநாளையொட்டி, 10 சிறப்பு தபால் தலைகளும் வெளியிடப்பட்டன. அதில், ராணி, அவருடைய மகன் இளவரசர் சார்லஸ், பேரன் இளவரசர் வில்லியம், கொள்ளுப்பேரன் இளவரசர் ஜார்ஜ் என 4 தலைமுறைகளைச் சேர்ந்தவர்களின் புகைப்படங்கள் இடம்பெற்று இருந்தன.

மேலும், அரச குடும்ப இளம் தலைமுறையுடன் ராணி எடுத்துக் கொண்ட புகைப்படம் வெளியிடப்பட்டது. அதில், ராணியின் 5 கொள்ளுப்பேர பிள்ளைகளும், 2 இளம் பேரப்பிள்ளைகளும் இடம்பெற்றுள்ளனர்.

ராணி பிறந்த நாளுக்காக, பிரதமர் டேவிட் கேமரூன் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

ராணி எலிசபெத், உலகின் அசாதாரண தருணங்களில் எல்லாம் நம்மை வழிநடத்தி உள்ளார். இரண்டாம் உலகப் போரின்போதும், 1966ம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு உலக கோப்பையை வழங்கியபோதும், அதற்கு 3 ஆண்டுகள் கழித்து, மனிதன் முதல்முதலாக நிலாவில் காலடி வைத்தபோதும், வடக்கு அயர்லாந்தில் அமைதி திரும்பியபோதும் அவர் நம்மை வழிநடத்தி வந்துள்ளார். எத்தனை அரசியல் புயல்கள் அடித்த போதிலும், அவர் பாறை போன்ற வலிமையுடன் திகழ்ந்து வருகிறார். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

ராணியின் மகன் இளவரசர் சார்லஸ், வானொலியில் ஒலிபரப்புவதற்காக, சிறப்பு வாழ்த்து செய்தியை வாசித்து பதிவு செய்தார்.

# கொண்டலிலை மழை கறுக்கத் தோன்றிய தேவதைகள்

அந்த வீட்டுக்கு ஜன்னல் சுவரிலும் இருந்தது. கூரையிலும் இருந்தது. அதைப் பார்த்தபோது ஆச்சரியமும் சிரிப்புமாய் இருந்தது.

வெளியில் நின்று பார்த்தபோது அந்த வீடு மூன்று மாடிக் கட்டடமாய்த் தெரிந்தது. பயணப் பைகளுடன் களைக்கக் களைக்க ஏறியபோதுதான் மூன்று மாடிக்கு மேல் நாலாவது தளமும் இருப்பது தெரிந்தது. நாங்கள் கூரையில் இருந்த அந்தச் சிறியவறைக்கு வந்த சேர்ந்தோம். கூரையில் இருந்த அந்தச் சிறியவறைக்கு வந்து சேர்ந்தோம். கூரையிலை கூட அறையொன்றைக் கட்டி வாடகைக்கு விடும் புத்திசாலித்தனத்தை மெச்சத்தான் வேண்டும்.

"என்ன - முகம் வாட்டமாய்க் கிடக்கு. இடம் பிடிக் கேல்லையோ? நீங்கள் வரப்போறியன் எண்டு பெரிய கஸ்ரப்பட்டுத்தான் இந்த அறையை வாடகைக்குப் பிடிச்சனான்". கூட்டி வந்தவர் சொன்னார்.

"அப்படியொண்டும் இல்லை. பயணக் களைப்பு" எனச் சமாளித்தேன்.

"நாங்களெல்லாம் ஐஞ்சாறு பரப்புக் காணிக்குள்ள வீடும் வீட்டில் இருந்து ஐநூறு யார் தள்ளிக் கிணறும் வளவு மூலைக்குள்ள கக்கூசும் எண்டு விட்டு வீதியாய் வாழ்ந்தவங்கள்தான், என்ன செய்யிறது? இனிப் புதிய சூழலை சமாளிச்சு வாழப்பழகவேணும்" என்று அன்போடு சொன்னார்.

"நான் வந்த எழுபதுகளில் இங்க எனக்கெண்டு யாரும் இல்லை. கொஞ்ச நாளைக்குள்ளேயே ஐந்தாறு இடம் மாறி ஒரு நாள் வீதிக்கு வரவேண்டியதாய்ப் போச்சுது. வீதியிலையே மூண்டு நாட்கள் திரிஞ்சன். நல்லவேளை அது கோடைகாலம். இந்தக் கதைகளைச் சொல்லி உங்களைச் சோரப் பண்ண விரும்பவில்லை. பயணக்களை தீரப் போய்ப் படுங்கோ" எனச் சொல்லிவிட்டுப் படுத்துவிட்டார்.

எனக்கு கூரை யன்னலுக்குக் கீழே படுக்கை ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. படுக்கையென்றால் கட்டில் மெத்தையல்ல. ஒரு போர்வையைத் தரையிலே விரித்து இன்னொரு போர்வையால் போர்த்துப்படுப்பது.

படுத்திருந்தபடியே அந்தக் கண்ணாடி யன்னலுக்கூடாக வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். வாகன நெரிசலோடு பெரிய கட்டடங்கள் நிறைந்த காடாய் பாரிஸ் நகரம் விரிந்து கிடந்தது. தமிழ் தவிர வேறு மொழி தெரியாத நான் இந்தப் பிரெஞ்சு நகரத்தில் விசா எடுத்து, இடங்கள் கண்டுபிடித்து, வேலை தேடி, காசு சேர்த்து,

**எழுதித் தீரா பக்கங்கள்:**
கனடா செல்வம் அருளானந்தம் தான் ஆரம்பகால வாழ்க்கையை புலம் பெயர் மண்களில் அனுபவித்ததையும் அப்படி ஊர்த்தமிழில் எழுதி புத்தக வெளியீடு விழா லண்டனில் அண்மையில் நடைபெற்றது. அந்த புத்தகத்திலிருந்து சில பகுதிகளை தமிழர் தகவல் வாசகர்களுக்காக :

ஊர் போய்ச் சேர்வது எக்காலம்?

எனக்கு வாழ வழங்கப்பட்ட பூமி இதுவோ?

நித்திரையோ வருகிறதாக இல்லை. அந்தக் கூரை யன்னலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஊர் பற்றிய நினைவுகள் மனதிலே ஓடிக் கொண்டிருந்தன. ஊர், வளவு, வீடு வீட்டைப் பற்றி யோசிக்கத்தான் திடீரென்று ஞாபகம் வந்தது. இது வீட்டுக்கூரை வேயிற வருடம். வீடு வேய்வது என்றவுடன் வியேந்தம்மானின் நினைவும் வந்தது.

வீடு வேய்வதென்பது சாதாரண விடயமல்ல. முதலில் இரண்டு மூன்று பனைக்காணிக்காரர்களிடம் சென்று ஓலை தீர்க்க வேண்டும். பிறகு சனிக்கிழமை ஓலை வெட்டென்றால் புதன்கிழமை சாந்தைக்குச் சென்று ஓலை வெட்டுக்காரரை முன்பதிவு செய்ய வேண்டும். சாந்தை எங்களுக்கு அருகிலிருந்த ஒரு கிராமம்.

சனிக்கிழமை அதிகாலையிலேயே வெட்டுக்காரர்கள் வந்து விடுவார்கள். நான் வெள்ளெனவே எழும்பி ஆயத்தமாய் நிற்பேன். ஏதோ வேலை செய்வதற்காக அல்ல; ஓலை வெட்டைப் பார்ப்பதற்கு.

'தறதற' என்று நாலைந்து பேர் பனைகளில் ஏறுவார்கள். 'சற சற'வென ஓலைகள் ஆடி விழுகின்ற அழகும் ஓசையும் இனிமையான இசையுடன் கூடிய நடனம் போல் இருக்கும். பனைகளில் நுங்கு வெட்டுவதற்கு எங்களுக்கு உரிமையில்லா விட்டாலும் ஓலை வெட்டுகிறவர்கள் கனிவானவர்கள். மிக அருமையான கனிந்த நுங்கு வெட்டித் தருவார்கள்.

மத்தியானத்துக்கு மேல் மாமாமாரும் அங்கிள்மாரும் ஓலை மிதிக்க வந்துவிடுவார்கள். ஓலைகளை இழுத்து இழுத்துக் கொடுக்க நீள வாக்கில் ஓலையைப் போட்டு காலால் மிதித்துக் கொண்டு போவார்கள். சின்னவயதிலை கருக்கு வெட்டிப் போடும் என்று அம்மம்மா என்னை ஓலைகளுக்குக் கிட்டப் போக விடமாட்டா.

இதெல்லாம் நடந்து கொண்டிருக்க மூன்று மணிக்கு மேல சாடையான வெறியோடை வியேந்தம்மான் உள்ளே நுழைவார். திடகாத்திரமான உடல். அவர் வருகை ஒரு கூத்தில் ராசா வருவது போல் இருக்கும். நான் அறிந்த முதலும் கடைசியுமான கலகக்காரன் அவர் தான்.

கோவில் சபையோடு அவருக்கு எப்பவும் சண்டை டெய்சி அக்கா தூங்கிச் செலுத்த போது துக்கமணி அடிக்கவில்லையென்று மாவிலை கட்டியிருந்த கோவில்மணியை இரவோடை இரவாய் அறுத்து வீழ்த்தி ஐந்தாறு பேரிடமாவது அடிவாங்கியருப்பார். அவவின் உடலை சவக்காலைக்குள் அடக்கம் செய்ய மறுத்த போது தனியாளாய் நின்று போராடி சவக்காலைக்குள் அடக்கம் செய்தது பெரிய வரலாறு.

கோவில் நிலுவைகளைக் கட்டமாட்டார். கோயிலுக்கும் வரமாட்டார். பங்குச் சுவாமியாரைக் கண்டால் பத்தடி தள்ளி நிற்பார்.

ஆனால் கோவில் திருநாள் அன்று சொரூபம் கொண்டு கரோலை வெளியிலை வரேக்கை மூன்றவாது பாடல் அவர்தான் பாடுவார். அதற்கொரு காரணம் இருந்தது. அப்பன் பாட்டன் என்று அவருடைய பரம்பரைதான் அந்தப் பாடலைப் பாடுவார்கள். அந்த உரிமையை விட்டுக் கொடுக்க முடியாதெல்லோ. 'பவனியைப் பாரும், திட்டன் வார பவனியைப் பாரும்' என்ற அந்தப் பாடல் இப்பவும் காதிலை கேட்டுக் கொண்டேயிருக்கிறது. அவர் பாடுவதில் கோயில் சபையாருக்கு பெரிய விருப்பமில்லை. ஆனால் ஒருத்தரும் தடுக்கமாட்டினம். மடியிலை அம்மான் வில்லுக்கத்தி வைச்சிருப்பார் எண்டு பயம்.

ஒரு நாள் சந்தையிலை மூப்பர் இவரைக் கண்டு "நீ கோயில் காசு கட்டிறதில்லை.

நீ செத்தால் உன்ரை சடலத்தை சவக்காலைக்குள் தாக்க விடமாட்டன்" என்றாராம். "அப்ப சடலத்தை நீயே வைச்சிரு" என்று அம்மான் பதில் சொல்ல சனம் முழுக்கச் சிரிச்சதாம்.

காசு செலவழிக்கிறது அம்மம்மா எண்டாலும், வீட்டு வேய்ச்சல் எண்ட இந்தச் சடங்குக்குப் பெரியாளாய் இருப்பது வியேந்தம்மான்தான். அவர் அம்மம்மாவின் சகோதரன். அவர் பள்ளிக்கூடம் போனதில்லை. வேதப்புத்தகம் படிக்கவில்லை. இலக்கியம் தெரியாது. ஏதோ தனக்கு தெரிந்த ஒரு தர்மத்தின்படி இயங்கி வாழ்வைக் கடந்தவர்.

அம்மான் வேட்டி அல்லது சாறம் கட்டியிருந்தாலும் உள்ளங்கி (கோவணம்) தெரியிற மாதிரித்தான் திரிவார். அது அவருடைய எதிர்ப்புகளை வெளிப்படுத்தும் அடையாளமாகவே எனக்குப்பட்டது.

நான் நண்பர்களோடு நிற்கும்போது அம்மான் தெருவில் வருவார். நண்பர்கள் "அம்மான் சீன்சை மூடுங்கோ! கூத்தெல்லோ தெரியுது" என நக்கல் அடிப்பார்கள். "நில்லுங்கோடா தாய்.... குஞ்சுகள்" எனக் கெட்டவார்த்தை சொல்லி எங்களைத் துரத்துவார். எனக்கு அவர் பேரன் முறைதானே. பெரிய வெட்கமாய் இருக்கும்.

கூரை வேய்வதிலெல்லாம் எங்களுக்கு உதவி செய்யும் அம்மான் சித்திரை வைகாசிக் கள்ளு முடியமுதல் அம்மம்மாவுடன் அல்லது மாமாவுடன் பெரிய கொழுவல் ஒண்டைப் போடுவார். அது ஒரு பழைய காணிப் பிரச்சினையைக் காரணம் காட்டித் தொடங்கும். இந்தச் சண்டை வருசாவருசம் நடக்கும். முடிவில் அப்படியே கோபித்துக் கொண்டு ஐந்தாறு மாதத்திற்கு வீட்டுப்பக்கம் வரமாட்டார்.

நத்தாரண்டு விடியக்காலை திருந்தாதி மணி கேட்கேக்கை அம்மான் திரும்ப வீட்டுக்கு வருவார். அம்மம்மாவும் அவர் நெத்தியில் குரூசு போட்டுக் கைவியளம் கொடுப்பா. அந்த உறவும் நேசமும் அடுத்த சித்திரை வைகாசிக் கள்ளோடு மறுபடியும் முடியும். ஆனால் என்னை எப்ப கண்டாலும் அன்போடு பேசி நலம் விசாரிப்பார்.

அவர் வழக்கமாக என்னிடம் கேட்கின்ற ஒரு கேள்வி. அது நக்கலோ அல்லது அக்கறையோ என்று எனக்கு இப்பவும் புரியுதில்லை. "எப்ப ராசா படிப்பு முடியும்?" இதை என்ரை ஆறாம் வகுப்பிலையே கேட்கத் தொடங்கிவிட்டார். கொஞ்சம் சங்கடமாய்த்தான் இருக்கும். ஏனென்றால் அதற்கான விடை எனக்குத் தெரியாது. இப்பவும் தெரியாது. அது இப்பவும் தொடர்கிறது.

அம்மான் கூரை வேய்வதில் நிபுணர், கடகடவெனப் பனைமட்டைகளை வெட்டிக் காயப்போடுவார். மட்டையை வெட்ட வெட்ட நல்ல நல்ல தூசணங்கள் போகும். அதைவிட ஊர் அறியாத கெட்ட கதைகளும் வந்து கொண்டிருக்கும். வெறியைப் பொறுத்து தூசணங்களின் கனதி அதிகமாகும். அம்மம்மா அங்கினேக்கை நிண்டாவெண்டால் "அறுந்து போவானே! வாய் அழுகப் போகுதடா. மக்கள் மருமக்கள் குஞ்சு குறுமன் நிக்கிற இடத்திலை என்னடா கதைக்கிறாய். நீ கட்டாயம் நரகத்துக்கு தான் போவாய்" என சத்தம் வைப்பா.

"ஓமடி! ஓமடி! உங்களைப் போல எல்லோரும் மோட்சத்துக்குப் போனால் ஆரைப்போட்டு 'அந்தாள்' (கடவுள்) நரகத்திலை எரிக்கிறது? பொச்சு மட்டையையோ? அது அங்கிடக்கோ தெரியா. எங்களைப் போல ஆக்களைத்தான் போட்டெரிக்க வேணும்" என்றபடியே வேலையையும் தூசணங்களையும் தொடர்வார்.

இப்படி அந்தச் சனிக்கிழமை சந்தோசமாயப் போகும். மாலை ஆறுமணிக்குமுதல் ஓலைகளைத் திரும்ப

இழுத்துக் கொடுக்க 'கரம்' போடப்படும். வட்டமாய் ஓலைகளை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கிக் கொண்டு போவார்கள். அந்தச் சின்ன வட்டம் இரண்டாள் உயரத்திற்கு இருக்கும். அதற்குப் பெயர் தான் கரம். அதற்குமேல் பாரமான பொருட்கள் வைக்கப்படும்.

அதற்குப்பிறகு ஒரு மாதத்துக்கு மேல் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து ஓலை பதமாய் ஒரு மண்நிறத்தில் வந்துவிடும்.

இதற்குப் பிறகுதான் வீடு வேய்ச்சலுக்கு நாள் குறிக்கப்படும். வேய்ச்சலுக்கு முதலே வீட்டுக்குள்ளை இருக்கின்ற சாமான்களை ஒழுங்குப்படுத்தி வெளியில் வைக்க வேண்டும். உள்ளுக்குள் வைத்து மூடக்கூடியதை மூடிவைக்க வேண்டும். வேய்ச்சலன்று அதிகாலை ஐந்து மணிக்கே மாமா வந்துவிடுார்.

மாமா கடகடவென்று தாழ்வார ஓலையெல்லாத்தையும் கழட்டிக் கழட்டி எறியஇ நானும் என் நண்பர்களும் எடுத்து அடுக்குவோம். அந்த ஓலைகளை அடுக்கிக் கட்டிமுடிய முன்னர் தோட்டக்காரர் வந்து வேண்டிக் கொண்டு போய்விடுவர்.

இன்னொரு புறம் மா குழைப்பதும் தேங்காய் துருவுவதுமாக குசினி அமளியாயிருக்கும். அன்று காலையில் அவிக்கின்ற குழல் புட்டும் கருவாட்டுப் பொரியலும் சம்பலும் அருமையாயிருக்கும். அதெல்லாம் சேர்ந்து வாற வாசைனைக்கும் உருசைக்கும் பாரிஸ் நகரை வித்துக் கொடுக்கலாம்.

குழலால் புட்டைத் தள்ளித் தள்ளிவிட சொந்தபந்தம் எல்லாம் சாப்பிட்டுக் கொண்டேயிருப்பார்கள். எந்த வருசமாவது அந்தப் புட்டின் உருசி குறைந்து போனதாக ஞாபகம் இல்லை. வீட்டுவேய்ச்சல் புட்டைப் போல் என் வாழ்க்கையில் இன்னொரு சாப்பாடு கிடைத்ததுமில்லை.

எட்டுமணிக்கு முதல் காலைச் சாப்பாடு முடிந்துவிடும். கரத்தால் இரண்டு மூன்று பேர் ஓலைகளை இழுத்து வருவார்கள். இரண்டு மூன்று பேர் ஓலைகளைக் கூரையை நோக்கி எறிவார்கள். கூரையில் நின்று இரண்டு மூன்று பேர் ஓலைகளை அடுக்குவார்கள். அடுக்கிய ஓலைகளைக் குத்துசியால் குத்திக் கட்டுகிற நாரை கூரையின் உட்புறத்துக்குத் தள்ளுவார்கள். கீழே சிலர் நின்று கோர்த்துவிட வேண்டும். மேலே வந்த நாரை இழுத்துக் கட்டுவார்கள்.

ஓலைகள் நல்லாய் மேலே போனபின்தான் வியேந்தம்மான் வருவார். அவருக்குத்தான் முகடு கட்டத்தெரியும். முகடு கட்டுவது பிழைத்தால் வீடு ஒழுகத் தொடங்கிவிடும். "ஐம்பது வருசத்துக்கு மேல் எத்தனை முகடு கட்டியிருப்பன்" எனப் புளுகிக்கொண்டே மற்றவர்களை அதட்டி, வேலைவாங்குவார்.

யாராவது ஒருவர் மாதகலுக்குப்போய் வாளை மீன் வேண்டி வருவர். மத்தியானத்துக்கு மணக்க மணக்க அருமையான மீன்குழம்புச் சாப்பாடு. ஒரு மணிக்குமுதல் எல்லாம் முடிந்து விடும்.

இப்போ எங்கள் இனத்துக்கே ஒரு கூரையில்லாமல் போய் விட்டது. அதை வேய்ந்துதர எந்த வியேந்தம்மானும் எங்கள் மத்தியில் இல்லை.

இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கையில் தான் நெஞ்சு திடுக்கிட்டது. நாளை அதிகாலை வெள்ளென எழும்பி சித்தைப் பொலிசிலை அகதியாய் என்னைப் பதிவு செய்ய வேணும். இன்னாரின்ரை மகன், இந்த சாதிக்காரன், இந்த ஊர்க்காரன் இப்படியெல்லாம் பெயர் இருந்த எனக்கு இப்போது புதுப் பெயர் சூட்டப்போகிறார்கள்.

நாளையிலிருந்து, என் பெயர் அகதி.

■

# இசை ஆற்றலும் இரக்கமும் மிக்க இசை வித்தகி

# சிவசக்தி சிவநேசன்

**கலாநிதி. ஆறுதிருமுருகன்**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

ஈரம் நிறைந்த அகமும், கனிவு நிறைந்த குரல் வளவும் கொண்ட சகோதரி திருமதி. சிவசக்தி சிவநேசன் அம்மையாருக்கு உயரிய விருது கிடைத்த செய்தி அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகிறேன். 48 ஆண்டுகளுக்கு முன் இணுவில் மருதனார்மடம் பல்லப்பவயிரவர் கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் கூட்டுப்பிரார்த்தனையில் சகோதரி சிவசக்தியோடும், யானும் என் சகோதர சகோதரிகளும் தவறாது பங்கு பற்றுவோம். அந் நிகழ்வு இன்றும் அகத்தில் பசுமையாகவுள்ளது. இராமநாதன் கல்லூரியில் யான் சிறுவனாகக் கற்கும் காலத்தில் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் தேவாரம் சொல்லித் தந்த சிவசக்தி அக்காவின் ஆளுமையை அன்றே யான் கண்டு வியந்தேன். மிகச்சிறிய வயதில் அவரது நடன அரங்கேற்றம் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. உலகப் புகழ் பெற்ற வீணை வித்துவான் ரி. பாலச்சந்தர் பிரதம விருந்தினராக வருகைதந்து அக்காவை வாழ்த்திய சிறப்பு மறக்கமுடியாது. புகழ் பூத்த ஆசிரியர் சிவப்பிரகாசப்பிள்ளை அங்கையற்கண்ணி தம்பதிகளின் தலைமகளாக விளங்கும் சிவசக்தி அக்கா அவர்களின் திருமணநாள் மிகச்சிறப்பாக உடுவிலில் நடைபெற்றது.



மணமகன் சிவநேசன் அவர்கள் புகழ் பூத்த வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியரின் மகன். கற்றசமூகம், கலைஞர்கள் நிறைந்த சபையில் இவர்களின் திருமணவீடு சிறப்பாக நடைபெற்றது.

சிவசக்தி அக்கா வீணை வாசிப்பதிலும் சிறந்தவர். அறுசுவை உணவு ஆக்குவதில் வல்லவர். ஆயகலைகள் அறிந்த உண்மைக் கலைஞர் இவர். இவரது ஒப்பற்ற பண்பினால் பலரது பாராட்டையும் பெற்று வருபவர். எங்கள் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் தொண்டு நன்றிக்குரியது. இவரது பேருதவியால் சிவபூமி பாடசாலைக்கு மாடிக்கட்டடம் கட்டும் வாய்ப்புக் கிட்டியது. பாடசாலையின் பல்துறை வளர்ச்சிக்கு இவரும், இவரது மாணவர்களும் பெருந்துணை செய்து வருகிறார்கள். சிவசக்தி அக்காவின் சிறப்பு விருது குறித்து தமிழர் தகவல் ஆசிரியர் திரு.நா. சிவானந்தஜோதி அவரைக் கௌரவம் செய்வதை அறிந்து ஆனந்தமடைகிறேன்.

## மேஷம்

நாலும் தெரிந்த அனுபவசாலி நீங்கள்!

உங்கள் ராசிக்கு 3ம் வீட்டில் சந்திரன் அமர்ந்திருக்கும்போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால், புதிய முயற்சிகள் வெற்றியடையும். தள்ளிப்போன காரியங்கள் விரைந்து முடியும். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு. வழக்கு சாதகமாகும்.


செவ்வாய் 8-ல் ஆட்சி பெற்று அமர்ந்திருக்கும்போது இந்த ஆண்டு பிறப்பதால், அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பும் அதனால் ஆதாயமும் கிடைக்கும். சகோதர ஒற்றுமை வலுப்பெறும். பழைய கடன் பிரச்சனைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும். ஆவணி மாதம் பிற்பகுதிவரை செவ்வாயுடன் சனியின் சேர்க்கை இருப்பதால், சிறுசிறு விபத்துக்கள், உடல்நலக் குறைவு, வீண்பகை போன்றவை வந்துசெல்லும். வீடு, மனை வாங்குவதில் எச்சரிக்கையுடன் செயல்படவும்.

வருடம் பிறக்கும்போது உங்கள் ராசியில் உச்சம் பெற்ற சூரியனுடன் புதனும் சேர்ந்திருப்பதால், அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். பூர்வீகச் சொத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

1.8.16 வரை குரு 5-ம் வீட்டில் இருப்பதால், மனக் குழப்பங்கள் நீங்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் நல்ல வேலை கிடைக்கும். சிலருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு 6-ல் மறைவதால், மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை நீடிக்கும். அவ்வப்போது மரியாதைக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும் வக்ரகதியிலும் உங்கள் ராசிக்கு 7-ல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால், மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். மனைவிவழி உறவினர்களிடம் மரியாதை கூடும்.

வருடம் முழுவதும் அஷ்டமத்து சனி நீடிப்பதால், அடிக்கடி மனச்சஞ்சலம் ஏற்படும். சிறுசிறு விபத்துகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போடவேண்டாம். குடும்ப விஷயங்களை



மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

26.8.16 முதல் 18.9.16 வரை சுக்ரன் 6-ல் சென்று மறைவதால், வாகன விபத்து, வழக்கால் நெருக்கடிகள், வாழ்க்கைத் துணைக்கு உடல்நலக் குறைவு ஏற்படக்கூடும். வருடம் முழுவதும் ராகு 5-ல் இருப்பதால் பிள்ளைகளை அனுசரித்துப் போகவும், அவர்களின் படிப்பு மற்றும் திருமண விஷயத்தில் அலட்சியம் வேண்டாம்.

ஆனால், கேது 11-ல் இருப்பதால், ஷேர் மூலம் பணம் வரும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். வேற்று மொழியைச் சேர்ந்தவர்களால் நன்மை உண்டாகும்.


வியாபாரத்தில், கடினமாக உழைத்து ஓரளவு லாபம் பெறுவீர்கள். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். இப்போதைக்கு பெரிய முதலீடுகள் வேண்டாம். கட்டட உதரிபாகங்கள், கடல்வாழ் உயிரினம், பெட்ரோ கெமிக்கல் வகைகளால் ஆதாயம் உண்டு. ஆனி, புரட்டாசி, தை, மாசி, ஆகிய மாதங்களில், நண்பர்களது உதவியால் வியாபாரத்தை விரிவுபடுத்த சந்தர்ப்பம் உண்டாகும்.

உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகளைப் போராடியே பெறவேண்டி இருக்கும். ஒரு சிலருக்கு, பணியின் காரணமாக அயல்நாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

மாணவ - மாணவிகள், பாடத்தில் கவனம் செலுத்துவது அவசியம். போட்டிகளில் வெற்றி பெறும் வாய்ப்பு உண்டாகும். கலைத் துறையினரே! போட்டிகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். சம்பள விஷயத்தில் கறாராக இருங்கள்.

மொத்தத்தில் இந்த துர்முகி வருடம் சூழ்ச்சிகளையும், சிக்கல்களையும் தந்து உங்களை அச்சுறுத்தினாலும், இறுதியில் உங்களை வெற்றி பெற வைப்பதாக அமையும்.

## ரிஷபம்



கொள்கை மாறாதவர் நீங்கள்.

உங்கள் ராசிக்கு 2-ம் வீட்டில் இந்த வருடம் பிறப்பதால், சின்னச்சின்ன ஆசைகள் நிறைவேறும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். தன்னம்பிக்கை கூடும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வேலை அமையும். வெளிநாடு வெளிமாநிலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

9.9.16 முதல் 25.10.16 வரை செவ்வாய் 8-ல் மறைவதாலும் 19.9.16 முதல் 13.10.16 வரை உங்களின் ராசிநாதனான சுக்ரன் 6-ல் மறைவதாலும் வீண் அலைச்சல், தொண்டை வலி, சகோதர வகையில் சச்சரவுகள், வழக்கால் நிம்மதியின்மை, கணவன் - மனைவிக்குள் விவாதங்கள் வந்து போகும்.

வருடம் முழுவதும் ராகு 4-லும் கேது 10-லும் தொடர்வதால், தாயின் உடல் நலன் பாதிக்கப்படும். அவருக்கு சிறு சிறு அறுவை சிகிச்சைகள் செய்ய நேரிடும். வாடகை வீட்டில் இருப்பவர்களுக்கு உரிமையாளரால் சிற்சில பிரச்சனைகள் உண்டாகும். மற்றவர்களுக்கு ஜாமீன் தரவேண்டாம். சின்னச்சின்ன அவமானங்கள் வந்து போகும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப்போகும்.

1.8.16 வரை குரு பகவான் 4-ல் அமர்வதால், வேலைச் சுமை அதிகரிக்கும். வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடும். சிலர், சொந்த ஊரிலிருந்து வேறு ஊருக்கு மாற வேண்டியது வரும். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு 5-ல் அமர்வதால், வசதி, வாய்ப்புகள் பெருகும். வருமானத்தை உயர்த்த அதிரடியாக சில திட்டங்கள் தீட்டுவீர்கள். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். குலதெய்வ பிரார்த்தனைகள் நிறைவேறும்.

ஆனால் 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 6-ல் சென்று மறைவதால், வேலைச் சுமை அதிகரிக்கும். உங்களுடன் பழகும் சிலரே உங்களுக்கு எதிராகச் செயல்படக்கூடும்.

வருடம் முழுவதும் சனி உங்கள் ராசிக்கு 7-ல் அமர்ந்து கண்டகச் சரியாகத் தொடர்வதால், கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம், சச்சரவுகள் வரும். திருமண முயற்சிகள் தாமதமாக முடியும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். முக்கியமான பணிகளை நீங்களே நேரடியாகச் செய்து முடிப்பது நல்லது. பாஸ்போர்ட், வாகனத்துக்கான லைசென்ஸ், ஆர்.சி. புத்தகங்களை உரிய நேரத்தில் புதுப்பித்துக் கொள்ளவும்.

வியாபாரத்தில் ஆழம் தெரியாமல் காலைவிட வேண்டாம். லாபம் மந்தமாக இருக்கும். மாறி வரும் சந்தை நிலவரத்தை அவ்வப்போது உன்னிப்பாக கவனித்து செயல்படவும். விளம்பர யுக்திகளாலும், தள்ளுபடி அறிவிப்பாலும் பழைய சரக்குகளை விற்றுத் தீர்ப்பீர்கள். வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். புதிய நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்வது மற்றும் கூட்டுத் தொழில் தொடங்குவதற்கு முன்பாக வழக்கறிஞரிடம் ஆலோசிப்பது நல்லது. ஆவணி, ஐப்பசி, மாசி மாதங்களில் பற்று வரவு உயரும். ஹோட்டல், கெமிக்கல், எண்ணெய், மூலிகை, கமிஷன் வகைகளால் ஆதாயம் உண்டு.

வருடம் முழுவதும் கேது 10ல் தொடர்வதால், உத்தியோகத்தில் கூடுதல் நேரம் வேலை பார்க்க வேண்டி வரும். அதிகாரி, உங்களைப் புரிந்து கொள்ளமாட்டார். உங்கள் உழைப்புக்கு வேறு சிலர் உரிமை கொண்டாடுவார்கள். சக ஊழியர்களில், சிலர், உங்களுக்கு ஆதரவாகவும், சிலர் எதிராகவும் செயல்படுவர். உங்களில் சிலருக்கு அயல்நாட்டில் அல்லது வெளிமாநிலத்தில் வேலை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆடி, மாசி மற்றும் பங்குனி மாதங்களில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். சம்பள பாக்கி கைக்கு வரும்.

மாணவ - மாணவியர், படிப்பில் அதிக கவனம் செலுத்தவும். நீங்கள் விரும்பும் பாடப்பிரிவில் சேர சிலரின் சிபாரிசு தேவைப்படும். கலைத் துறையினரே ! வீண் வதந்திகள் இருக்கவே செய்யும். மனம் தளராமல் இருங்கள். உங்களை விட வயதில் குறைந்த கலைஞர்களால் நல்லது நடக்கும்.

## மிதுனம்

எதிலும் யதார்த்தத்தை விரும்புபவர் நீங்கள்!

சூரியன், புதன் மற்றும் சுக்ரன் சாதகமாக இருக்கும் நேரத்தில் இந்த வருடம் பிறப்பதால், உங்களுடைய நிர்வாகத் திறமை அதிகரிக்கும். அதிகாரிகளின் நட்பு கிடைக்கும். கடினமான காரியங்களையும் எளிதாக முடித்துக் காட்டுவீர்கள். பணப்புழக்கம் அதிகமாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு புதிய வேலை கிடைக்கும்.

உங்கள் ராசியிலேயே வருடம் பிறப்பதால், ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். அவ்வப்போது வீண் டென்ஷன், தலைச்சுற்றல், மன அமைதியின்மை, முன்கோபம் வந்து நீங்கும். தோலில் நமைச்சல், தேமல், நரம்புச் சுளுக்கு வரக்கூடும்.

வருடம் முழுவதும் சனி ராசிக்கு 6-ம் வீட்டில் வலுவாக அமர்ந்திருப்பதால், புதிய திட்டங்கள் நிறைவேறும். எதிரிகளும் நண்பர்களாவார்கள். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் உண்டாகும். புது பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்து காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். சொந்த ஊரில் மதிப்பு கூடும். வீடு, வாகனம் வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். வழக்கில் தீர்ப்பு சாதகமாகும்.

செவ்வாய் 6-ம் வீட்டில் வலுவாக அமர்ந்திருக்கும் போது வருடம் பிறப்பதால், அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் ஆதாயம் அடைவீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

ராகு 3-ம் வீட்டிலேயே தொடர்வதால், உங்கள் உழைப்புக்கு உரிய பலன் கிடைக்கும். பிரச்சனைகளுக்கு உரிய தீர்வைக் காண்பீர்கள். தடைப்பட்ட காரியங்கள் நல்லபடியாக முடியும். ஷேர் மூலம் பணம் வரும். ஆனால், கேது 9-ல் இருப்பதால், தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அவருடன் கருத்து வேறுபாடுகளும் ஏற்படக்கூடும். பிதுர்வழிச் சொத்தில் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். 26.10.16 முதல் 2.12.16 வரை செவ்வாய் உங்கள் ராசிக்கு 8-ல் அமர்வதால், சொத்துப் பிரச்சனைகள், சகோதர வகையில் மனத்தாங்கல், பழைய கடனை நினைத்த கவலைகள் வந்து செல்லும்.

14.10.16 முதல் 7.11.16 வரை சுக்ரன் 6-ல் மறைவதால், கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபங்கள், பிள்ளைகளால் செலவுகள் வந்து போகும்.



1.8.16 வரை குருபகவான் உங்களுடைய ராசிக்கு 3-ம் வீட்டில் நிற்பதால் இளைய சகோதர வகையில் பிணக்குகள் வரும். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு ராசிக்கு 4-ல் அமர்வதால், உங்களைப் பற்றிய வதந்திகள் அதிகமாகும். அவ்வப்போது மனஇறுக்கம் உண்டாகும். தாயாரின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். வழக்கில் வழக்கறிஞரை மாற்ற நேரிடும். ஆனால் 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 5-ல் அமர்வதால், மனத்தெளிவு உண்டாகும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம், திருமணம் தொடர்பான முயற்சிகள் நல்லபடி முடியும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

வியாபாரத்தில், புது முதலீடுகள், செய்து விரிவுப்படுத்துவீர்கள். பங்குதாரர்கள் உங்களுக்குக் கட்டுப்படுவர். சந்தை நிலவரத்தை அறிந்து முக்கிய முடிவு எடுப்பீர்கள். வாடிக்கையாளர்கள் அதிகரிப்பர். கட்டுமானப் பொருட்கள், பெட்ரோ கெமிக்கல், போர்டிங், லாட்ஜிங் வகைகளால் லாபம் அதிகரிக்கும்.

வருடம் முழுவதும் குரு சாதகமாக இல்லாததால், உத்தியோகத்தில் மேலதிகாரிகளால் ஒதுக்கப்படுகிறோமோ என்ற ஒரு சந்தேகம் உண்டாகும். சக ஊழியர்களின் இரட்டை வேடத்தை புரிந்து கொள்வீர்கள். மூத்த அதிகாரிகளைப் பற்றிய ரகசியங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டாம். சிலருக்கு உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகும். சித்திரை, புரட்டாசி, கார்த்திகை, பங்குனி மாதங்களில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டு.

மாண-மாணவியர்கள் கடினமாக உழைத்து உயர்கல்வியில் வெற்றி பெறுவர். கலைத்துறையினருக்கு, புகழ் பெற்ற நிறுவனங்களில் இருந்து அழைப்பு வரும்.

## கடகம்


தாயை தெய்வமாகப் போற்றுபவர்களே!

புத்தாண்டு பிறக்கும்போது உங்களின் யோகாதிபதியான செவ்வாய் பூர்வ புண்ணியஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால், அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். பூர்வீக சொத்து பங்கைக் கேட்டு வாங்குவீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு விரயஸ்தானமான 12-ம் வீட்டில் பிறப்பதால், அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும்.

வருடம் முழுவதும் 5-ம் இடத்திலேயே சனி அமர்ந்திருப்பதால், மனதில் குழப்பமும் தடுமாற்றமும் இருந்தபடி இருக்கும். பிள்ளைகளை அனுசரித்துப் போகவும். மகளின் திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம். வருடம் பிறக்கும்போது சூரியனும் புதனும் வலுவாக இருப்பதால், எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். குடும்பத்தில், கணவன் - மனைவிக்குள் இருந்து வந்தப் பிணக்குகள் நீங்கும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும்.

3.12.16 முதல் 15.1.17 வரை செவ்வாய் ராசிக்கு 8-ல் மறைவதால், வெளிவட்டாரத்தில், அலைச்சல் அதிகமாகும். உடன்பிறந்தவர்களுடன் மனவருத்தம் வந்து போகும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில் தீர்ப்பு தாமதமாகும். 8.11.16 முதல் 3.12.16 சுக்ரன் 6-ல் மறைவதால், வாகனப் பழுது, சிறு சிறு விபத்துக்கள், தாயாருக்கு மருத்துவச் செலவுகள், கழுத்து வலி வந்து செல்லும். 1.8.16 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு தனஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால், மகிழ்ச்சியான சூழ்நிலை உண்டாகும். பண வரவு உண்டு. சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும், உடல் நலம் சீராகும். நீண்ட நாட்களாக போக நினைத்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு ராசிக்கு 3-ல் அமர்வதால், பண விஷயத்தில் கறாறாக இருங்கள். புது முயற்சிகள் தாமதமாகி முடிவடையும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 4-ல் அமர்வதால், தாயின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். அவசரப்பட்டு எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும்.

வருடம் முழுவதும் ராகு 2-லும் கேது 8-லும் நீடிப்பதால், குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உங்கள் குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிட அனுமதிக்காதீர்கள். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். வாகன விபத்துக்கள் ஏற்படக்கூடும். சந்தேகத்தால் நல்ல நட்புகளையும் இழக்க நேரிடும்.



வியாபாரத்தில் சிறு சிறு நஷ்டங்கள் வந்து போகும். எதிர்பார்த்த ஆர்டர் தாமதமாக வரும். பழைய பாக்கிகளை போராடி வசூலிக்க வேண்டி வரும். தொழில் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முடியாமல் திணறுவீர்கள். ஏற்றுமதி - இறக்குமதி, லாட்ஜிங், வாகன உதிரி பாகங்கள், ஸ்டேஷனரி, கமிஷன் வகைகளால் லாபம் அடைவீர்கள். சித்திரை, வைகாசி, புரட்டாசி ஆகிய மாதங்களில் லாபம் வரும். கடையை விரிவு படுத்துவீர்கள்.

உத்தியோகத்தில், உங்களுக்கு நெருக்கமாக இருந்த அதிகாரி மாற்றப்படுவார். புது அதிகாரிகள் உங்களைப் புரிந்து கொள்ளாமல் செயல்பட வாய்ப்பு இருக்கிறது. வேலைச்சுமையும் அதிகரிக்கும். எதிர்பாராத இடமாற்றம் உண்டு. வைகாசி, புரட்டாசி, மார்கழி மாதங்களில் அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும். எதிர்பார்த்த சலுகைகளும், விரும்பிய இடத்துக்கே வேலை மாற்றமும் உண்டாகும்.

மாண-மாணவிகளே! படிப்பு மட்டுமல்லாமல் மொழியறிவுத் திறனிலும் கவனம் செலுத்துவீர்கள். அறிவியல் சம்பந்தமான இடங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பும் உண்டாகும். சிலருக்கு பள்ளி மாற வேண்டி இருக்கும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு சிறு சிறு கசப்பான அனுபவங்களைத் தருவதாகத் திகழ்ந்தாலும், அனுபவ அறிவால் உங்களை முன்னேற வைப்பதாக அமையும்.

## சிம்மம்

அன்புக்குக் கட்டுப்பட்டவர் நீங்கள்!


புத்தாண்டு பிறக்கும்போது, உங்களின் யோகாதிபதி செவ்வாய் கேந்திர பலம் பெற்று அமர்ந்திருப்பதால், தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் உடல்நிலை சீராகும். உடன்பிறந்தவர்கள் உதவியாக இருப்பார்கள். வழக்கில் தீர்ப்பு சாதகமாகும்.

வருடம் பிறக்கும்போது, ராசிநாதன் சூரியனும், ஜீவனாதிபதி சுக்ரனும் 8-ல் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால், அரசால் அனுகூலம் உண்டு. சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். 1.8.16 வரை ஜென்ம குரு தொடர்வதால், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். கணவன் - மனைவிக்குள் வீண் சந்தேகத்தால் பிரிவுகள் வரக்கூடும். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு 2-ம் வீட்டில் அமர்வதால், எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். தடைப்பட்டிருந்த சுப நிகழ்ச்சிகள் நல்லபடி நிறைவேறும். ஷேர் மூலம் பணம் வரும். குடும்பத்தில் அமைதி நிலவும். மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. ஆனால் 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 3-ல் அமர்வதால், ஒரே நாளில் பல வேலைகளையும் பார்க்க வேண்டி வரும். புதிய முயற்சிகள் தாமதமாகி முடியும்.

4.12.16 முதல் 29.12.16 வரை சுக்ரன் 6-ல் மறைவதால், நரம்புச் சுளுக்கு, சோர்வு, வீண் செலவு, வாகன விபத்து, கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வருடம் முழுவதும் அர்த்தாஷ்டமச் சனி தொடர்வதால், சின்னச் சின்ன வேலைகளைக் கூட அலைந்து முடிக்க வேண்டி வரும். தவிர்க்க முடியாத செலவுகள் அதிகரிக்கும். தாயாருக்கு சிறு அறுவை சிகிச்சை செய்ய வேண்டி வரும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப் போகும்.

வருடம் முழுவதும் உங்கள் ஜன்ம ராசியில் ராகுவும், 7-ல் கேதுவும் தொடர்வதால், அடிக்கடி முன்கோபம் வரும். குடும்பத்தில் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். வாழ்க்கைத் துணைக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை.

உங்களின் யோகாதிபதியான செவ்வாய் 16.1.17 முதல் 26.2.17 வரை 8-ல் மறைவதால், வரவுக்கு மிஞ்சிய செலவுகள், சகோதர வகையில் சங்கடங்கள், எதிலும் நம்பிக்கையின்மை, வீடு, மனை வாங்குவது, விற்பதில் சின்னச் சின்ன இழப்புகள், மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும்.



வியாபாரத்தில் ஏற்ற இறக்கங்கள் இருக்கும். வருடத்தின் மத்தியப் பகுதியிலிருந்து ஓரளவு லாபம் வரும். விளம்பர யுக்திகளைக் கையாண்டு லாபம் ஈட்டுவீர்கள். புது சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தி வாடிக்கையாளர்களைக் கவர்ந்திழுப்பீர்கள், என்றாலும் 4-ம் வீட்டில் சனி நிற்பதால், பங்குதாரர்கள் உங்களைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். சில விஷயங்களுக்கு நீதிமன்றம் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படும். சினிமா, பதிப்புத்துறை, ஹோட்டல், கிரானைட், டைல்ஸ், மர வகைகளால் ஆதாயம் உண்டு. வைகாசி, ஆவணி, தை மாதங்களில் பாக்கிகள் வசூலாகும். வங்கிக் கடன் கிடைத்து உங்கள் ரசனைக்கு ஏற்ற இடத்துக்குக் கடையை மாற்றுவீர்கள்.

உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாகும். சிலருக்கு இடமாற்றம் உண்டு, என்றாலும் ஆனி, ஐப்பசி, தை மாதங்களில் அலுவலகத்தில் அமைதி உண்டாகும். உங்களுக்கு முக்கியத்துவம் அதிகமாகும். வேறு சில புது வாய்ப்புகளும் வரும். சம்பளம் உயரும். உங்கள் மீது தொடுக்கப்பட்ட அவதூறு வழக்கில் இருந்து விடுபடுவீர்கள்.

மாண-மாணவியர்களே! படிப்பில் அலட்சியம் வேண்டாம். அன்றைய பாடங்களை அன்றே படித்துவிடுவது நல்லது. விளையாடும்போது சின்னச் சின்ன காயங்கள் ஏற்படக் கூடும். கவனமாக இருக்கவும். போட்டித் தேர்வுகளில் போராடி வெற்றி பெற வேண்டி வரும்.

கலைத் துறையினர் விடா முயற்சியால் சாதித்துக் காட்டுவார்கள். அவர்களுடைய படைப்புத்திறன் வளரும். மொத்தத்தில் இந்த தமிழ்ப் புத்தாண்டு, முற்பகுதியில் சின்னச் சின்ன சங்கடங்களை தந்தாலும், வருடத்தின் பிற்பகுதி வருங்காலத் திட்டங்களை நிறைவேற்ற உகந்த வாய்ப்புகளைத் தருவதாக அமையும்.

## கன்னி

எதிலும் தூய்மையை விரும்புவர் நீங்கள்!

சந்திரன் 10-வது ராசியில் நிற்கும்போது புது வருடம் பிறப்பதால், உங்கள் சாதனை தொடரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். புது வேலை கிடைக்கும். மதிப்பு மரியாதை கூடும். அரசால் அனுகூலம் உண்டு. புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் தனாதிபதி சுக்ரன் 7-ல் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதுடன் உங்களது ராசியையும் பார்த்துக் கொண்டிருப்பதால், உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் கூடும். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள்.

வருடத் தொடக்கத்தில் செவ்வாய் 3-ம் இடத்தில் வலுவாக நிற்பதால், தைரியம் பிறக்கும். பழைய கடன் பிரச்சனையில் ஒன்று தீரும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். ராசிநாதன் புதன் வருடப் பிறப்பின் போது 8-ல் மறைந்திருப்பதால், உறவினர், நண்பர்களின் அன்புத் தொல்லைகள் வந்து போகும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும்.

ராகு பகவான் ராசிக்கு பன்னிரண்டாம் வீட்டிலேயே தொடர்வதால், மாதக் கணக்கில் தள்ளிப்போய் கொண்டிருந்த வேலைகள் வேலைகள் முடிவடையும். எதிர்பாராத பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். அண்டை மாநிலப் புகழ் பெற்ற புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். கேது 6-ம் வீட்டில் நீடிப்பதால், சுப நிகழ்ச்சிகளால் வீடுகளை கட்டும். ஷேர் மூலம் பணம் வரும். வழக்கு சாதகமாகும்.

1.8.16 வரை குரு ராசிக்கு 12-ல் நிற்பதால், எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகமாகும். பணம் வந்தாலும் செலவுகளும் தொடரும். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு ஜன்ம குருவாக வருவதால், உடல் நலம் பாதிக்கும். மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. புது நண்பர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 2-ல் அமர்வதால், அமைதி உண்டாகும். கணவன் மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் விலகும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். நோய் குணமாகும். வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியம் சீராகும். அவர் உங்களின் தியாக உள்ளத்தைப் புரிந்து



கொள்வார். பேச்சில் கனிவு பிறக்கும்.

2.2.17 முதல் 11.4.17 வரை செவ்வாய் உங்களுடைய ராசிக்கு 8-ல் மறைவதால், சின்னச் சின்ன ஏமாற்றங்கள், பண இழப்புகள், சகோதர வகையில் மனக்கசப்புகள், வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் ஏற்படும். வழக்கில் தீர்ப்பு தாமதம் ஆகும்.

சனி பவான் உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டிலேயே தொடர்வதால், உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். பூர்வீகச் சொத்தில், உங்கள் ரசனைக்கேற்ப சில மாற்றங்கள் செய்வீர்கள். மகனுக்கு நல்ல வேலை கிடைக்கும். உங்களை எதிர்த்தவர்களும் நட்பு பாராட்டுவார்கள். சிலருக்கு அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும்.

வியாபாரத்தில் சில தந்திரங்களைக் கற்றுக் கொள்வீர்கள். வி.ஐ.பி-களும் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். ஆனி, ஆடி, மாசி மாதங்களில் வியாபாரம் செழிக்கும். பெரிய நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உணவு, ஸ்பெகுலேஷன், சிமெண்ட், கல்விக் கூடங்களால் ஆதாயம் அடைவீர்கள்.

உத்தியோகத்தில் போராட்டங்கள் அதிகரிக்கும். வேலையில் நீடிப்பது பற்றி மனக் குழப்பம் உண்டாகும். உயர் அதிகாரிகள் உங்களை அலட்சியப்படுத்தினாலும், சக ஊழியர்கள் உதவியாக இருப்பார்கள். ஆனி, ஆடி, கார்த்திகை மாதங்களில் வேலையில் ஆர்வம் உண்டாகும். சிலர் புது பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

மாணவ - மாணவிகள், படிப்பில் ஆர்வம் காட்டுவார்கள். நினைவாற்றல் கூடும். கலைத் துறையினரின் படைப்புகள் பலராலும் பாராட்டப்படும். புது வாய்ப்புகளும் வந்து சேரும்.

## துலாம்


இன்ப துன்பங்களை சமமாகக் கருதுபவர் நீங்கள்! உங்கள் ராசிக்கு 9-ல் சந்திரன் இருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேற்றம் காண்பீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிரபலங்களின் அறிமுகமும், அதனால் ஆதாயமும் கிடைக்கும். வீடு மனை வாங்கும் யோகம் உண்டாகும். புது பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் புதன் 7-ல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால் திருமண பேச்சுவார்த்தை சாதகமாகும்.

வருட ஆரம்பத்தில் உங்களுடைய ராசியதிபதி சுக்ரன் உச்சம் பெற்று அமர்ந்திருப்பதால், மகிழ்ச்சி உண்டாகும். ஆனால், சுக்ரன் 6-ல் மறைந்திருப்பதால், வாகனப் பழுது, சிறுசிறு விபத்துகள், கணவன் - மனைவிக்கு இடையில் மனவருத்தம் வந்து நீங்கும். வருடம் முழுவதும் பாதச் சனி தொடர்வதால், குடும்பத்தில் அவ்வப்போது சச்சரவுகள் ஏற்படும்; பொறுமை அவசியம். வழக்குகள் தள்ளிப்போகும். எவருக்கும் சாட்சிக் கையெழுத்துப் போடவேண்டாம். பணப் பற்றாக்குறை அதிகரிக்கும். பூர்விகச் சொத்தில் கவனம் தேவை. மறதியால் விலையுயர்ந்த பொருட்களை இழக்க நேரிடும்.

குரு பகவான் 1.8.16 வரை உங்கள் ராசிக்கு லாப வீட்டில் அமர்ந்திருப்பதால், பிரபலங்கள் மற்றும் நல்லவர்களின் நட்பால் உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். பழைய நகையை மாற்றி, புது டிசைனில் ஆபரணம் வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். மகளுக்கு நல்ல வரன் அமையும். அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு உங்கள் ராசிக்கு 12-ல் மறைவதால், வீண் விரயம், ஏமாற்றம், எதிலும் தடை தாமதங்கள் வந்து செல்லும். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை உண்டாகும். திடீர் பயணங்கள் அதிகரிக்கும். அவ்வப்போது கனவுத் தொல்லை அதிகரிக்கும்.

17.1.17 முதல் 9.3.17 வரை குரு பகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் உடல் நலனில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்குள் சச்சரவுகள் வரக்கூடும்.

வருடம் முழுவதும் ராகு பகவான் உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்திலேயே தொடர்வதால்,



செல்வம், செல்வாக்கு கூடும். கொடுத்த பணம் திரும்ப வரும். ஷேர் மூலமாகவும் பணவரவு உண்டு. சகோதர வகையில் ஒற்றுமை வலுப்படும். வெளிவட்டாரத்தில் மரியாதை கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். தள்ளிப்போன திருமண முயற்சிகள் கூடிவரும். உடல் ஆரோக்கியம் சீராகும். பிற மொழி பேசுபவர்களால் யோகம் உண்டாகும். ஆனால், கேது 5-ல் இருப்பதால், வீண் குழப்பங்கள், பிள்ளைகளால் பிரச்சனைகள் தோன்றும். பூர்வீகச் சொத்தில் பிரச்சனை ஏற்படும். மகளின் திருமண விஷயத்தில் அவசரம் வேண்டாம்.

27.1.17 முதல் வருடம் முடியும் வரை சுக்ரன் ராசிக்கு 6-ல் மறைந்திருப்பதால், சளித் தொந்தரவு, தலைவலி, மூச்சுப் பிடிப்பு வந்து செல்லும். மின்சார சாதனங்கள் பழுதாகும். வாழ்க்கைத் துணைக்கு வயிற்று வலி, தைராய்டு பிரச்சனை வந்து போகும்.

வியாபாரத்தில், புதிய முதலீடுகள் செய்வீர்கள். சிலர், கடையை சொந்த இடத்துக்கு மாற்றுவீர்கள். புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். கமிஷன், ஸ்பெகுலேஷன், அழகுசாதனப் பொருட்கள், கம்ப்யூட்டர் உதிரி பாகங்களால் லாபம் அடைவீர்கள். ஆடி, ஆவணி, மார்கழி, பங்குனி மாதங்களில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

உத்தியோகத்தில், வேலை அதிகரிக்கும். ஆடி, ஆவணி, மார்கழி மாதங்களில் அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் சிலருக்கு வேலை அமையும். மாணவ - மாணவிகளுக்கு விரும்பிய கல்விப் பிரிவில், எதிர்பார்த்த நிறுவனத்தில் இடம் கிடைக்கும். மதிப்பெண் கூடும். கலைத் துறையினருக்கு பெரிய நிறுவனங்களின் வாய்ப்புகள் வரும்.

மொத்தத்தில் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு சின்னச் சின்ன ஏமாற்றங்கள் தந்தாலும், சாதனைகள் படைக்கத் தூண்டுவதாக அமையும்.

## விருச்சிகம்

சவால்களை ஏற்று சாதிப்பவர் நீங்கள்!


உங்கள் ராசிநாதன் செவ்வாய் ராசியிலேயே ஆட்சி பெற்று இருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், இடையூறுகளைக் கடந்து சாதிப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வீடு,மனை வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். சகோதர வகையில் அனுகூலம் உண்டாகும். ஆனால், சனியின் சேர்க்கை இருப்பதால், அலர்ஜி, ரத்தசோகை, முன்கோபம் வந்து செல்லும்.

உங்கள் ராசிக்கு 8-ம் வீட்டில் சந்திரன் நிற்கும்போது புத்தாண்டு பிறப்பதால், அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். வருடம் பிறக்கும்போது சூரியனும், சுக்ரனும் சாதகமாக இருப்பதால், எதிர்ப்புகள் இல்லாமல் போகும். இங்கிதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அரசாங்க காரியங்கள் சாதகமாகும்.

வருடம் முழுவதும் ஜன்மச் சனி தொடர்வதால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் மனைவிக்கு இடையில் சிலர் குழப்பம் ஏற்படுத்தப் பார்ப்பார்கள். சொத்துப் பிரச்சனைக்கு சுமுகத் தீர்வு காண்பது, தேவையற்ற சங்கடங்களைக் குறைக்கும்.

1.8.16 வரை குரு 10-ல் தொடர்வதால், வேலைச் சுமையால் அசதி, சோர்வு வந்து நீங்கும். விலை உயர்ந்த நகை, பணத்தை இழக்க நேரிடும். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். மறைமுக அவமானங்கள் வந்து நீங்கும். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குருபகவான் லாப வீட்டில் அமர்வதால், தடைகள் நீங்கும். வி.ஐ.பி-களின் அறிமுகம் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். இழந்த செல்வாக்கைத் திரும்பப் பெறுவீர்கள். தடைப்பட்ட சுபநிகழ்ச்சிகள் நல்லபடி நிறைவேறும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும். மூத்த சகோதர வகையில் ஆதரவு பெருகும். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குரு பகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் உங்களுடைய ராசிக்கு 12-ல் மறைவதால், திடீர் பயணங்களும் சுபச் செலவுகளும் அதிகரிக்கும்.

வருடம் முழுவதும் ராகு 10-ல் தொடர்வதால், கடினமான காரியங்களையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். நிர்வாகத் திறன் கூடும். குடும்பத்தில் அமைதி திரும்பும். சில அவமானங்கள் ஏற்படக்கூடும்.



திறமையும் உழைப்பும் இருந்தும் உரிய பலனைப் பெற முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள்.

கேது 4-ம் வீட்டிலேயே தொடர்வதால், அவ்வப்போது தன்னம்பிக்கை குறையும். தயாரின் உடல் நலம் பாதிக்கக்கூடும். கடன் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். மின்சார சாதனங்கள் பழுதாகும். அரசு காரியங்கள் தாமதமாகும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும்.

வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொண்டு கூடுதல் லாபம் அடைவீர்கள். பெரிய முதலீடுகள் இப்போதைக்கு வேண்டாம். வாடிக்கையாளர்களிடம் கனிவு தேவை. வேலையாட்கள், பங்குதாரர்களுடன் போராட வேண்டி இருக்கும். உணவு, இரும்பு, கன்சல்டன்சி, ரியல் எஸ்டேட் மற்றும் மர வகைகளால் ஆதாயம் உண்டு. சித்திரை, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் திடீர் லாபம் உண்டு.

2.8.16 முதல் உத்தியோகத்தில் எல்லோராலும் மதிக்கப்படுவீர்கள். வேலைச்சுமை குறையும், என்றாலும் ராகு 10-ல் நிற்பதால், மூத்த அதிகாரிகளை திருப்திப்படுத்த முடியாமல் திணறுவீர்கள். உங்களைப் பற்றிய விமர்சனங்கள் அதிகமாகும். சில நேரங்களில் வேலையை விட்டுவிடலாமா என்ற எண்ணம் ஏற்படும். அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம். சித்திரை, ஆவணி, புரட்டாசி, தை மாதங்களில், தள்ளிப்போன பதவி உயர்வும் சம்பள உயர்வும் உங்களைத் தேடி வரும்.

மாணவ - மாணவிகளுக்கு, படிப்பில் கூடுதல் உழைப்பு தேவை. விளையாட்டு, பொது அறிவுப் போட்டிகளில், பாராட்டும் பரிசும் கிடைக்கும். கலைத் துறையினரின் தடைப்பட்டு கிடந்த படைப்புகள், இப்போது ரிலீஸாகும். அதேநேரம், வீண் பழிகளும் விமர்சனங்களும் அதிகரிக்கும். அதற்காக வருந்த வேண்டாம்.

## தனுசு

முயற்சியை எப்போதும் கைவிடாதவர் நீங்கள்!

உங்கள் ராசிக்கு 7-ம் வீட்டில் சந்திரன் இருக்கும்போது, புது வருடம் பிறப்பதால், உங்களுடைய அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். தடைப்பட்டு வந்த திருமணம் உடனே முடியும். கணவன் - மனைவிக்கு இடையில் அந்நியோன்யம் கூடும்.

வருடம் பிறக்கும்போது சுக்ரனும் புதனும் சாதகமாக இருப்பதால், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப் பற்றாக்குறையைப் போக்க கூடுதலாக உழைப்பீர்கள். மனைவிவழி உறவினர்கள் மத்தியில் மதிப்பு கூடும். பிரபலங்களுக்கு நெருக்கமாவீர்கள். பழைய கடன் பிரச்னை தீரும்.

1.8.16 வரை உங்கள் ராசிநாதன் குரு பகவான் 9-ல் நிற்பதால், பிரச்சனைகளைத் தீர்க்கும் சூட்சமத்தை உணர்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். தாயாரின் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளும், நண்பர்களாவார்கள். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு 10-ம் வீட்டில் நுழைவதால், சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உங்களின் திறமையையும் உழைப்பையும் மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்வர். எந்த விஷயத்தையும் நீங்களே நேரடியாக முடிக்கவும்.

ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 11-ல் அமர்வதால், அடிப்படை வசதி, வாய்ப்புகள் பெருகும். சுபகாரியங்கள் நடைபெறும். தாயின் ஆதரவு அதிகரிக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் இடம் உண்டு. மூத்த சகோதர வகையில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வருடம் முழுவதும் ராகு பகவான் 9-ம் வீட்டிலேயே தொடர்வதால், தன்னம்பிக்கை பிறக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். வீடு கட்ட, தொழில் தொடங்க வங்கிக்கடன் உதவி கிடைக்கும். தந்தைக்கு ரத்த அழுத்தம், கை, கால் வலி வந்து போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்சனை தலைதூக்கும். தந்தையாருடன் மனத்தாங்கல் வரும். செலவுகளும் அதிகரிக்கும். பாகப்பிரிவினை பிரச்னையில் இப்போது தலையிட வேண்டாம்.

ஆனால், கேது 3-ம் வீட்டிலேயே நீடிப்பதால், தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. இளைய சகோதர



வகையில் பிணக்குகள் நீங்கும். பங்குச் சந்தை மூலமாக பணம் வரும். கௌரவப் பதவிகள் வரும். வருடம் முழுவதும் விரயச் சனி தொடர்வதால், மனச் சஞ்சலம் உண்டாகும். எந்த ஒரு வேலையையும் போராடி முடிக்கவேண்டி வரும். வீண் அலைச்சல்கள் அதிகரிக்கும். நண்பர்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளை நீங்களே முன்னின்று நடத்துவீர்கள். திடீர் பயணங்கள் உங்களை அலைக்கழிக்கும். ஒரு சிக்கல் தீர்ந்தது என்று நினைக்கும்போது புதிதாக மற்றொரு சிக்கல் ஏற்படும்.

வியாபாரத்தில், வாடிக்கையாளர்களின் ரசனைகளுக்கு ஏற்ப முதலீடு செய்வது நல்லது. ஏற்றுமதி-இறக்குமதி, கெமிக்கல், பிளாஸ்டிக் வகைகளால் லாபம் அதிகரிக்கும். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனைகளை ஏற்பர். கடையை வேறு இடத்துக்கு மாற்றுவீர்கள். வைகாசி, ஆவணி, புரட்டாசி ஆகிய மாதங்களில் லாபம் அதிகரிக்கும்.

2.8.16 முதல் குரு உங்கள் ராசிக்கு 10-ல் அமர்வதால், உத்தியோகத்தில் பொறுப்பு அதிகமாகும். சக ஊழியர்களில் ஒருசிலர் அவர்களின் வீழ்ச்சிக்கு நீங்கள் காரணம் என்று தவறாகப் புரிந்து கொள்வார்கள். மறைமுக எதிர்ப்புகளும் இருக்கும். சிலருக்கு, கட்டாய ஓய்வு எடுக்க வேண்டிய சூழலும் உருவாகலாம். அதுவும் நன்மைக்கே! வைகாசி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் அலுவலகத்தில் உங்களின் மதிப்பு கூடும்.

மாணவ - மாணவிகள், ஒரு முறைக்கு பலமுறை படிப்பதும், படித்ததை எழுதிப்பார்ப்பதும் அவசியம். பெற்றோர் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள். கலைத்துறையினரே! படைப்புகளை வெளியிடுவதில் கொஞ்சம் விட்டுக் கொடுத்துப் போகவும், வேற்றுமொழி வாய்ப்புகளும் வரும்.

## மகரம்


மனதில் சரியெனப்பட்டதை தயங்காமல் செய்பவரே!

செவ்வாய், உங்கள் ராசிக்கு லாப ஸ்தானத்தில் ஆட்சி பெற்று அமர்ந்திருக்கும் நேரத்தில் புத்தாண்டு பிறப்பதால், எதிலும் உங்கள் கை ஓங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பேச்சில் கம்பீரம் கூடும். வீடு, மனை வாங்குவது விற்பது லாபகரமாக முடியும். உடன் பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. வெளி வட்டாரத்தில் மதிப்பு கூடும். கமிஷன் மூலம் பணம் வரும்.

சுக்ரனும், புதனும் சாதகமான வீடுகளில் செல்வதால், சின்னச் சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்வீர்கள். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு கூடும். பழைய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

உங்கள் ராசிக்கு 6-ல் சந்திரன் இருக்கும்போது, புது வருடம் பிறப்பதால், சில சவால்களைச் சந்திக்க வேண்டி வரும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். பயணங்களும், செலவுகளும் துரத்தும். சிலருக்கு வேற்று மாநிலம் அல்லது வெளிநாட்டில் வேலை கிடைக்கும். பழைய கடனை நினைத்து அவ்வப்போது கலங்குவீர்கள். வருடம் முழுவதும் ராகு 8-லும், கேது 2-லும் நீடிப்பதால், காலம் அறிந்து செயல்படுவது அவசியம். செலவுகள் தொடரும். சிலருக்கு அயல்நாடு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். கணவன் - மனைவிக்கு இடையில், சிலர் பிரச்சனை ஏற்படுத்தப்படுவார்கள். சிறு சிறு விபத்துக்கள் ஏற்படக்கூடும். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கையுடன் செயல்படவும். சிலருக்கு புண்ணிய தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டாகும்.

வருடம் முழுவதும் உங்கள் ராசிநாதன் சனிபகவான் லாப வீட்டில் தொடர்வதால், அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். வருமானம் உயரும். ஓரளவு சேமிப்புக்கும் இடமுண்டு. பெரிய பதவியில் இருப்பவர்களின் அறிமுகம் கிடைக்கும். வீட்டில் திருமணம், வளைகாப்பு, கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். நீண்ட காலமாக குழந்தை பாக்கியம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். ரசனைக்கு ஏற்ப புது வீடு வாங்குவீர்கள். மகனுக்கு வெளிநாட்டில் உயர்கல்வி அமையும். மனைவி வழியில் மரியாதை கூடும். சிலருக்கு கௌரவ பதவிகள் தேடி வரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும்.



1.8.16 வரை குருபகவான் 8-ல் மறைந்திருப்பதால், மறைமுக எதிரிகளால் ஆதாயம் அடைவீர்கள். திடீர் பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்க இயலவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். ஆனால், 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குருபகவான் உங்கள் ராசிக்கு 9-ம் வீட்டில் நுழைவதால், வீண் குழப்பங்கள், தடுமாற்றங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். திடீர் பணவரவு உண்டாகும். குடும்பத்தில் சச்சரவுகள் குறையும். பூர்வீகச் சொத்துப் பிரச்சனை முடிவுக்கு வரும். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குருபகவான் அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 10ம் வீட்டில் அமர்வதால், அடுக்கடுக்கான வேலைகளால் அவதிப்படுவீர்கள். வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். உங்களுடைய உழைப்புக்கு மற்றவர்கள் உரிமை கொண்டாடுவார்கள். தன்னம்பிக்கை குறையும்.

வியாபாரத்தில் சில நுணுக்கங்களைக் கற்றுக் கொள்வீர்கள். சந்தை நிலவரத்தை அவ்வப்போது கவனித்து அதற்கேற்ப செயல்படுங்கள். வேலையாட்களின் குறை, நிறைகளை பொறுமையாக சுட்டிக் காட்டி திருத்துங்கள். விளம்பரங்களின் மூலம் உங்கள் தொழிலை விரிவுப்படுத்துவீர்கள். மூலிகை, கட்டட உதிரி பாகங்கள், துணி, புரோக்கரேஜ் வகைகளால் லாபம் அடைவீர்கள். ஆனி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பழைய பாக்கிகள் வசூலாகும்.

உத்தியோகத்தில், உயரதிகாரிகளுக்கு தகுந்தாற்போலும் பேசும் வித்தையையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வருவீர்கள். ஆனி, ஐப்பசி கார்த்திகை, பங்குனி மாதங்களில் இழந்த சலுகைகளை மீண்டும் பெறுவீர்கள்.

மாணவ - மாணவிகளுக்கு போட்டித் தேர்வுகளில் வெற்றி உண்டு. கலைத் துறையினரின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

## கும்பம்

பிரதிபலன் பாராமல் உதவுபவர் நீங்கள்.

உங்கள் ராசிக்கு 3-ம் வீட்டில் சூரியன் பலம் பெற்று அமர்ந்திருக்கும் நேரத்தில், இந்தப் புத்தாண்டு பிறப்பதால் மனோபலம் கூடும். அரசால் அனுகூலம் உண்டாகும். நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்திருந்த விசா வரும். கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த கசப்பு உணர்வுகள் நீங்கும். மனைவிவழியில் ஆதரவு பெருகும். இழுபறியான வேலைகள் முடிவடையும்.

இந்தப் புத்தாண்டு உங்கள் ராசிக்கு 5-ம் வீட்டில் பிறப்பதால், அடிப்படை வசதிகள் உயரும். பிள்ளைகளால் மதிப்பு கூடும். மகளின் திருமணம் கூடிவரும். மகனின் உயர்கல்வி, வேலை போன்ற முயற்சிகள் சாதகமாக முடியும். பூர்வீகச் சொத்தை சீர்படுத்துவீர்கள்.

வருடம் முழுவதும் உங்கள் ராசிநாதன் சனிபகவான் 10-ம் இடத்திலேயே தொடர்வதால், உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகள் மேற்கொள்வீர்கள். உங்களின் நிர்வாகத் திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடிவடையும். வீடு கட்ட, வாகனம் வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். வருடம் பிறக்கும் நேரத்தில் செவ்வாய் பகவான் ஆட்சி பெற்று 10-ம் வீட்டில் அமர்ந்திருப்பதால், புது வேலை கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் அன்புடனும் அனுசரணையுடனும் நடந்து கொள்வார்கள். சிலருக்கு சொந்தமாக வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டாகும்.

1.8.16 வரை கரு 7-ல் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால், உங்களின் திறமைகள் வெளிப்படும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். திருமணம் கூடி வரும். மனைவிவழி உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். 2.8.15 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை, குரு ராசிக்கு 8-ல் சென்று மறைவதால், வீண் அலைச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கை குறையும். செலவுகள் அதிகமாகும். சில வேலைகளைப் போராடி முடிக்க வேண்டி வரும். மறதியால் விலை உயர்ந்த தங்க ஆபரணங்களை இழக்க நேரிடும். ஆனால் 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 9-ல் அமர்வதால், தன்னம்பிக்கை உண்டாகும். தொழிலதிபர்களின் நட்பு கிடைக்கும்.



வருடப் பிறப்பு முதல் ஆண்டு முழுவதும் உங்கள் ராசிக்கு 7-ம் இடத்திலேயே ராகு தொடர்வதால், வீண் சந்தேகத்தால் கணவன் - மனைவிக்குள் பிரிவுகள் வரக்கூடும். மனைவிவழி உறவினர்களுடன் மனத்தாங்கல் வரும். உங்களைவிட வயதில் குறைந்தவர்கள் மூலமாக ஆதாயம் அடைவீர்கள். கேதுவும் உங்கள் ஜன்ம ராசியிலேயே தொடர்வதால், ஆரோக்கியம் பாதிக்கும். இரவு நேர பயணங்களைத் தவிர்க்கவும்.

வியாபாரத்தில், போட்டிகளைச் சமாளிக்க அதிகம் உழைக்க வேண்டி வரும். பெரிய முதலீடுகள் செய்ய வேண்டாம். எவருக்கும் முன்பணம் தர வேண்டாம். புது தொழில், புது முயற்சிகளில் இறங்க வேண்டாம். கட்டட உதிரி பாகங்கள், கமிஷன், பூ, மர வகைகளால் ஆதாயம் அடைவீர்கள். இயன்ற வரையிலும் கூட்டுத் தொழிலைத் தவிர்க்கவும். கடையை அவசரப்பட்டு வேறு இடத்துக்கு மாற்ற வேண்டாம். ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் புது முதலீடுகள் செய்வீர்கள். எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில், உழைப்புக்கு ஏற்ற அங்கீகாரம் இல்லையே என ஆதங்கம் உண்டாகும். சூழலுக்கு ஏற்ப உங்களுடைய கருத்துக்களை மேலதிகாரிகளிடம் பதிவு செய்வது நல்லது. நியாயமான பதவி உயர்வு, சம்பள உயர்வைவிட போராடி பெற வேண்டி வரும். சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் அலுவலகத்தில் முன்னேற்றம் கிடைக்கும்.

மாணவ - மாணவிகளுக்கு மறதியால் மதிப்பெண் குறைய வாய்ப்பு உண்டு. ஆகவே, படிப்பில் கவனம் செலுத்தவும். கலைத் துறையினர் சம்பள விஷயத்தில் கறாராக இருக்கவும், பெரிய வாய்ப்புகளும் உங்களைத் தேடி வரும்.

மொத்தத்தில் இந்த புத்தாண்டு ஆரோக்கியக் குறைவையும், காரியத் தடங்கல்களையும் தந்தாலும், தொடர் முயற்சிகளால் இலக்கை எட்டிப் பிடிக்கவைப்பதாக அமையும்.

## மீனம்


பிறர் கஷ்டங்களைத் தனதாகக் கருதும் பண்பாளரே!

உங்கள் ராசிக்கு சுக ஸ்தானத்தில் துர்முகி வருடம் பிறப்பதால், கனவுகள் நனவாகும். தள்ளிப்போன காரியங்கள் விரைந்து முடிவடையும். பிரபலங்கள் நண்பர்களாவார்கள். தாயாரின் உடல்நிலை சீராகும். தாய்வழி உறவினர்களுடன் இருந்த மோதல்கள் விலகும். தாய்வழி சொத்து கைக்கு வரும்.

வருடம் முழுவதும் ராகு உங்கள் ராசிக்கு 6-ம் வீட்டிலேயே தொடர்வதால், பிரச்னைகள் வெகுவாக குறையும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். புது பதவிகள் தேடி வரும். வெற்றி பெற்ற மனிதர்களின் நட்பு கிடைக்கும். மழலை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளின் வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். ஷேர் மூலமாக பணம் வரும். வழக்கு சாதகமாகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். மகனுக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். அயல்நாட்டில் இருக்கும் நண்பர்களால் ஆதாயம் அடைவீர்கள். கேது ராசிக்கு 12-ல் மறைந்திருப்பதால், வாழ்க்கையின் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். திடீர் பயணங்கள் அதிகரிக்கும்.

1.8.16 வரை உங்கள் ராசிநாதன் குரு ராசிக்கு 6-ம் வீட்டில் மறைந்திருப்பதால், சில வேலைகளை போராடி முடிப்பீர்கள். வீண் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். மற்றவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம். 2.8.16 முதல் 16.1.17 வரை மற்றும் 10.3.17 முதல் 13.4.17 வரை குரு 7-ம் வீட்டில் அமர்ந்து உங்கள் ராசியைப் பார்க்க இருப்பதால் உங்களின் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் உண்டாகும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். புதியவரின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். ஆனால், 17.1.17 முதல் 9.3.17 வரை குரு அதிசாரத்திலும், வக்ரகதியிலும் ராசிக்கு 8-ல் அமர்வதால், குடும்பத்தினருடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வீண் அலைச்சல்கள் அதிகமாகும். சிலர், உங்களைப் பற்றிய தவறான வதந்திகளைப் பரப்புவர், பொறுமை அவசியம்.

இந்த வருடம் முழுவதும் சனி ராசிக்கு 9-ல் நிற்பதால், மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களை



முடித்துக் காட்டுவீர்கள். மதிப்பு கூடும். பழைய பிரச்சனைகள், சிக்கல்களுக்குத் தீர்வு காண்பீர்கள். அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பொது விழாக்களில் முதல் மரியாதை கிடைக்கும். ஆனால், தந்தையுடன் வாக்குவாதம், அவருக்கு நரம்புச்சுளுக்கு, மூட்டுத் தேய்மானம், சிறுசிறு அறுவை சிகிச்சைகள் வந்து போகும். பிதுர்வழி சொத்துப் பிரச்னை விஸ்வரூபமெடுக்கும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப்போகும்.

இந்தப் புத்தாண்டு செவ்வாய், சுக்ரன், புதன் ஆகிய கிரகங்கள் சாதகமாக இருக்கும் நேரத்தில் பிறப்பதால், செயலில் வேகம் கூடும். கலை, இலக்கியத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களின் கோபம் குறையும்.

வியாபாரத்தில் இழப்புகளைச் சரி செய்வீர்கள். மாறுபட்ட அணுகு முறையால் லாபம் ஈட்டுவீர்கள். தள்ளிப்போன ஒப்பந்தம் கூடிவரும். சிலர் சொந்த இடத்துக்கே கடையை மாற்றுவீர்கள். பதிப்பகம், போர்டிங், லாட்ஜிங், ஏற்றுமதி - இறக்குமதி வகைகளால் லாபம் அடைவீர்கள். வைகாசி, ஆவணி, தை, மார்கழி மாதங்களில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். 2.8.15 முதல், உத்தியோகத்தில் ஏற்றம் உண்டு. தடைப்பட்டிருந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மூத்த அதிகாரிகள் முக்கியத்துவம் தருவர். வைகாசி, ஆவணி, தை மாதங்களில் புது பொறுப்புகளுக்கும், பதவிக்கும் உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படும்.

மாணவ - மாணவிகளுக்கு, படிப்பில் முன்னேற்றம் உண்டு. தேர்வில் எதிர்பார்த்தபடி மதிப்பெண் வர வாய்ப்பு உண்டு. விரும்பிய கல்விப் பிரிவில் சேருவீர்கள். கலைத் துறையினருக்கு, அரசு விருது உண்டு. பெட்டிக்குள் முடங்கிய படம் ரிலீசாகும். வர வேண்டிய சம்பள பாக்கி கைக்கு வந்து சேரும். பெரிய நிறுவனங்கள் உங்களை அழைக்கும்.



# சைவத்தில் சமரசமா?

**மா. பட்டமுத்து, எம்.எஸ்.ஸி., பி.டி.**

சங்கரன் கோவில் 'சிவ சிவ' (டிசம்பர் 2005) இதழில் 'தன்மையும் வெம்மையும் நானே ஆயினான்' என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. அதில் 'சமரச மணம் கமழவும்' எனவும், 'சமய நல்லிணக்கம்' எனவும், 'சமயப் பிணக்கின்றி' எனவும், 'நஞ்சுண்ட அரனையும் மண்ணுண்ட மாலவனையும் இணைத்து' எனவும் சைவ சமயத்திற்கு மாறுபட்ட கருத்துகள் பேசப்படுகின்றன. இச்சமரசப் பேச்சு சைவ சமய மேன்மைக்கு எவ்வளவு பாதகம் விளைவிக்கும் என்பதை விளக்குவதே இம்மறுப்பின் நோக்கமாகும்.

### நாராயணன் யார்?

திருநாவுக்கரசு சுவாமிகள் 'அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே' எனவும்,

'நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாராயணர் அங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணில் இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே' எனவும்

அருளிச் செய்கிறார். முதலில் கூறப்பட்ட அரியும், அடுத்த திருப்பாடலில் காணப்படும் நாராயணனும் ஒருவரா? வெவ்வேறான தெய்வங்களா? ஒருவராக முடியாது. இருப்பின் அழியக் கூடிய நாராயணன் சிவபிரானின் தேவி என்று அபத்தமாக முடியும் அன்றோ! எனவே அவ்விருவரும் ஒரே தெய்வமல்ல என்பது தானே போதரும்.

### மூன்று வகைப்பட்ட நாராயணன்

சிவபிரானின் தாதான்மிய சக்திகள் நான்கில் புருஷ சக்தியே நாராயணன் எனப்படும். அந்நாராயணன் தான் எந்தையின் தேவி. 'அரியலால் தேவியில்லை' என்ற அருள்வாக்கு இந்த நாராயண சக்தியையேக் குறிப்பிடுகிறது.

இனி, சுத்தவித்தை 'முத்திபெற்று மலவாசனை மாத்திரம் உடையவராய்க் கீழுள்ள உருத்திரன், மால், அயன், இந்திரன் முதலியோரைத் தொழிற்படுத்துவோராகிய உருத்திரன் மால் அயன் இந்திரன் முதலியோருக்கும் அவர் தறுகரணாதிகட்கும் இடமாம் என்றுணர்க; என்று சிவஞான பாஷ்ய மொழியைச் சிந்திக்க. இதில் தொழிற்படுத்தும் நாராயணன், தொழிற்படும் நாராயணன் என இருவகை நாராயணர் பேச்படுகின்றனர். தொழிற்படுத்துகின்ற நாராயணனும் உயிர்த்தான். மலவாசனை மாத்திரம் உடையவன். பிறப்பிறப்பற்ற நிலை பெற்றவன். அவனது இருப்பிடம் சுத்தவித்தியா தத்துவம். அவனால் தொழிற்படுத்தப்படும் நாராயணன் கீழுள்ள பிரகிருதியில் உள்ளவன். அவன் 25 தத்துவங்களையே பேசும் வைணவர்களின் தெய்வம். அவனே 'ஆறு கோடி நாராயணர்' என அப்பர் பெருமானால் அடையாளம் காட்டப்பட்டவன். ஐயிரு பிறப்பெடுத்தவனும் அவனே. அங்ஙனம் 25 தத்துவங்களுட்பட்ட நாராயணனும், 36 தத்துவங்கட்கு அப்பாற்பட்ட சிவபிரானும் சமரசத் தெய்வங்கள் என்று கூறுவது சரியா? பஞ்சராத்திரம் என்றழைக்கப்படும் வைணவம் சித்தாந்த சைவத்தில் புறச்சமய வரிசையில் காணப்படுகிறது. அந்த வைணவமும், நமது 'மேன்மை கொள்' சைவமும் இருபெரும் தெய்வமுடையன என்று சமரசனம் பேசுவது பொருந்துமா? 12 பக்கங்களில் 'மாலறியா, நான் முகனும் காணாமலை' யாம் திருவண்ணாமலையின் ஈடிணையற்ற சிறப்பினை விரிவாக எடுத்துரைத்த கட்டுரைக்கு அடுத்து 'நஞ்சுண்ட அரனும், மண்ணுண்ட மாலவனும்' இருபெரும் தெய்வம் எனக் கூறும் கட்டுரை இடம் பெற்றது விசித்திரமன்றோ!

### சங்கரன் கோவில் சமரசத் தலமா?

சமரசம் கமழ்கின்ற, சைவ வைணவப் பேதமில்லாத தலமாகக் கட்டுரையாசிரியர் சங்கரன் கோவிலை வருணிக்கிறார். அத்தலத்தின் ஸ்தல புராணத்தில் இக்கூற்றுக்கு எவ்வளவு கூட ஆதாரமில்லை. சிவபிரானின் ஓர் அமசம் அல்லது ஒரு கூறே மஹாவிஷ்ணு என்ற உண்மையை உலகவர்க்குத் தெருட்டவே அன்னை ஈண்டு கோமதியாகத் தவம் புரிகிறாள். சங்கர நாராயணராகக் காட்சி கொடுத்தருள்பவர் பரசிவப்பிரபுவே அன்றி மால் அல்ல. 'இக்காட்சி போதும் மீண்டும் தங்கள் சுய வடிவத் திருமேனி காட்சி தந்தருள்க' என அம்மை வரம் வேண்டியபோது, ஈசுரன் சங்கரலிங்கப் பெருமானின் அருள்வடிவம் காட்டியருள்கிறார். சங்கரனும் நாராயணனும் (ஆகிய இரு பெருந் தெய்வங்கள்?) கூட்டணி அமைத்து காட்சி தந்தாரில்லை. சிவபிரான் நாராயணனைத் தமது இடப்பால் வைத்துக் காட்டுவார். ஆனால் திருமால் தமது வலப்பால் எம்பிரானை வைத்துக் காட்ட முடியுமா? சங்கர நாராயணர் ரிஷப வாகனத்தில் தான் தோன்றுகிறார். பாதி ரிஷபம், பாதி கருடன் எனக் காட்சி தந்தால் தானே இரு மதமும் சமரசம் எனப் பேச முடியும்! 'ஐய நின் கூறே மாலும் அயன் முதல் தேவும் என்னும் மெய்யுணர்வே எஞ்ஞான்றும் விளைவுற வேண்டும்' என்ற தலபுராணப்

பாடல் வரிகள் அரனின் கூறுதான் அரி என்ற உண்மையை ஆணித்தரமாக நிலைநாட்டுகிறதல்லவா? 1000ல் 10 ஒரு கூறு. அதே போல சிவபிரானின் ஒரு கூறுதான் திருமால். ஆயிரமும் பத்தும் சமமா? அதே போல் அரனும் அரியும் சமமா? அரனாகிய பெரிய தெய்வத்தின் ஓர் அம்சமே சிறிய தேவனாகிய மால் என்ற பேருண்மையைக் காட்டுவதே சங்கரன் கோயில் திருத்தலம்.

இதனைப் போன்றே உருத்திரன், மால், அயன், என்ற மும்மூர்த்திகளையும் தம்பால் காட்டிய சிவநாயகனே சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலயன் ஆவர். மூவரின் கூட்டணி வடிவன்று அது. 'தேவர்கோ அறியாத தேவதேவன். செழும் பொழில்கள் பயந்து காத்தளிக்கும் மற்றை மூவர் கோனாய் நின்ற முதல்வன்' என்று மணிவாசகப் பிரபு வணங்கும் எந்தையே அந்த மூர்த்தி.

## வேண்டாம் இந்த சமரசம்

நஞ்சுண்ட அரனும் மண்ணுண்ட மாலவனும் இரு பெருந் தெய்வங்களாகக் கட்டுரையாசிரியர் நினைக்கிறார். அரன் உண்ட நஞ்சு மண்ணுண்ட மாலவனை விரட்டியடித்துத் துயரூட்டியதை அவர் மறந்து விட்டாரா? திருவையாற்றில் அம்பாள் சந்நிதிக்கு எதிரே ஆஞ்சநேயர் இருப்பதால் அரியும் அரனும் ஒரே தெய்வம் என்ற சமரசத்திற்கு வலிமை ஏறுமா? சமயப் பிணக்கு சைவர்களால் தான் வருகிறதா? பௌத்தம், சமணம், வைணவம் ஆகிய புறச் சமயங்கள் அவ்வப்போது நமது சைவத்தின் மீது விடும் அஸ்திரங்களின் வரலாற்றைக் கட்டுரையாளர் மறந்துவிட்டாரா? பிற மதங்கள் எல்லாம் 'ஓரும் வேதாந்தத்தின் உச்சியில் பழுத்த ஆரா இன்ப அருங்கனி'யாகிய சித்தாந்த சைவத்தின் சோபானக் கிரமமாக அமைந்துள்ளன அல்லவா? சிவாலயங்களில் அறுவகைச் சமய மூர்த்தங்களையும் கோஷ்ட மூர்த்தங்களாகக் காணும் கட்டுரையாளர் அறுவகைச் சமயம் என எம்மதங்களாகக் குறிப்பிடுகிறார்? ஏகான்மவாதியாகிய சங்கராச்சாரியார் சுட்டிக்காட்டும் ஷண்மதமா? நமது சைவம் காட்டும் புறப்புறச் சமயம், புறச் சமயம், அகப்புறச் சமய, அகச் சமயம் ஆகியவற்றுக்கும், சங்கரரின் ஷண்மதத்திற்கும் சம்பந்தமேயில்லை என்பதைக் கட்டுரையாளர் புறக்கணித்து விட்டாரா?

## பணிவான விண்ணப்பம்

'சைவ சமயமே சமயம்', 'சைவத்தின் மேல் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வமில்லை' இவ்வுண்மையை நம்மவர் உளத்து நன்கு பதிய வைக்க எழுந்தனவே (கட்டுரையாளர் எடுத்துக் காட்டும்) கீழ்காணும் ஆதாரங்கள்,

"வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப் படுவார்க்கெலாம்
மாதேவன் அலால் தேவர் மற்றில்லையே"

(இத்திருப்பாடலின் முதல் 2 அடிகள் கட்டுரையில் இடம் மாறியுள்ளன) 'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள் வேதனைப்படுமிறக்கும் பிறக்கும் மேல் வினையும் செய்யுமாதலால் இவையிலாதான் அறிந்தருள் செயவன் அன்றே' இவை 'முக்கண்ணனையும் முகில் வண்ணனையும் இருபெருந் தெய்வங்கள்' என்ற கூற்றை மறுக்கப் போந்தவையே. முக்கண்ணன் முழுமுதற் பரம்பொருள். ஆனால் முகில் வண்ணனோ 'வேதனைப்படும், இறக்கும், பிறக்கும், மேல்வினையும் செய்யும்' உயிர் வர்க்கமே எனவே இச்சமரச நோக்கு நமக்கு வேண்டாம் எனப் பணிவன்புடன் கட்டுரையாளர்க்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

■




# வாசிப்பால் என்ன கிடைக்கும்?

## எஸ். ராமகிருஷ்ணன்

வாசிப்பு என்பது அன்றாட வாழ்க்கையில் இயல்பான ஒரு செயல்பாடாக இருக்க வேண்டும். அன்றாடம் குளிப்பது, சாப்பிடுவது மாதிரி. ஆனால், நம் சமூகம் இப்படி நினைப்பதில்லை. பள்ளிப் படிப்பு வேலைக்கான உத்தரவாதம் என்று நம்புகிறார்கள்; ஆனால், வாசிப்பது வாழ்க்கைக்கான ஊட்டம் என்று யாரும் கருதுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் பள்ளி, கல்லூரிப் படிப்புக்குப் பிறகு வாசிக்கும் பழக்கம் ஒருவருக்கு இருக்கிறது என்றால், முதலில் குடும்பத்தினரும், பிறகு பிறரும் இந்தப் பழக்கத்தை ஒரு பிறழ்வு என்றே கருதுகிறார்கள்.

காதலுக்கு எதிரியா?

இன்றைக்கு நம் சமூகத்தில் பெரும்பாலான குடும்பங்களில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் இல்லை. கணவன் வாசிக்கும் பழக்கம் உடையவனாக இருந்தால், மனைவிக்கு அது பிடிப்பதில்லை. வீணான பழக்கம் என்று அவள் கருதுவாள். மனைவிக்குப் புத்தகங்களில் ஈடுபாடு இருந்தால், கணவன் அதைப் பழித்துப் பேசுவான். மனைவிக்குப் பயந்து, வாங்கிய புதுப் புத்தகத்துக்கு அழுக்கான செய்தித்தாளைத் தேடி எடுத்து, அட்டை போட்டு, மறைத்து எடுத்துச்செல்லும் கணவன்களை எனக்குத் தெரியும். அஞ்சலில் அனுப்ப வேண்டிய புத்தகமாக இருந்தால், தன் முகவரி அல்லாத வேறு ஒன்றைத் தந்து, புத்தகத்தை அங்கே அனுப்பும்படி சொல்லும் கணவன்களையும் தெரியும். அதேபோல் ஒவ்வொரு புத்தகக் கண்காட்சியிலும் புத்தகம் வாங்க நினைத்து, கணவனைப் பார்க்கும் மனைவியைக் கண்ணால் ஜாடைசெய்து தடுக்கும் கணவன்களையும் பார்த்திருக்கிறேன்.

புத்தகங்களை விரும்பிப் படிக்கும்

தம்பதியரை அரிதாகவே பார்க்க முடிகிறது. இவர்கள் குழந்தைகளும் பெரும்பாலும் வாசிக்கும் பழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். பெற்றோர் புத்தகங்களை வாசிக்கும்போது, குழந்தைகளின் ஆரோக்கியமான மனவளர்ச்சிக்கான சாத்தியங்கள் கூடுகின்றன.

தன்னல வாழ்க்கை

கிட்டத்தட்ட எல்லாருக்குமே தங்கள் வாழ்க்கை, தங்கள் வேலை, தங்கள் குடும்பம் என்ற கவலைகளும் அக்கறைகளும் ஆர்வங்களும் தங்களைச் சுற்றியே அமைகின்றன. இவற்றில் எதுவுமே சமூகத்தின் தொடர்பு இல்லாமல் தனித்து இயங்குவதில்லை. ஆனால், பொதுவாக யாருமே இதை ஆழமாக உணர்வதில்லை. இதனாலேயே பல நடைமுறைச் சிக்கல்கள் அவரவர் வாழ்க்கையில் தோன்றுகின்றன. இப்படித் தோன்றும் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் சரிவரக் கையாள வேண்டும் என்றால், ஒவ்வொருவரும் தங்களை மீறி, தங்களுடைய குறுகிய உலகத்தைத் தாண்டிப் பார்க்க வேண்டும். இப்படிப் பார்க்க உதவுவதுதான் வாசிப்புப் பழக்கம். இது மிகக் குறுகிய நோக்கம் என்றாலும் பயனுள்ளது.

ஆனால், இதைவிட முக்கியமான உந்துதல் வாசிப்புக்குப் பின்னால் செயல்படுகிறது. அணுவில் தொடங்கி அண்டம் வரையிலான மாபெரும் இயக்கத்தைப் பற்றிய பிரமிப்பு; நம் உடலைப் பற்றி, நம் பரிணாம வளர்ச்சியைப் பற்றி, உலகைப் பற்றி, பிரபஞ்சத்தைப் பற்றிய பிரமிப்பு; நாம் அனைத்துடனும் தொடர்புகொண்டிருக்கிறோம், அந்தத் தொடர்பைப் பற்றிய பிரமிப்பு. நம் இயக்கம் முழுவதற்கும் அடிநாதமாக இருக்கும் ஒழுங்கைப் பற்றிய பிரமிப்பு. இந்தப் பிரமிப்புதான் அறிவியல் தொடங்கி இலக்கியம் வரை வெவ்வேறு வடிவங்களில் தோன்றி நம்மை ஈர்க்கிறது. இந்த ஈர்ப்பையும் பிரமிப்பையும் வாசிப்பு தக்கவைக்கிறது; நம் அன்றாட ஊட்டச் சக்தியாக அதை மாற்றுகிறது.

இலக்கியம் மட்டும் வாசிப்பு அல்ல

இலக்கியத்தை வாசிப்பது மட்டும் வாசிப்பு என்று பரவலாக மக்கள் நினைக்கிறார்கள். வாசிப்பு எந்தத் துறையைச் சார்ந்தும் இருக்கலாம். தன் தொழில் தொடர்பாக வாசிப்பதை நாம் வாசிப்பு என்று கொள்ள முடியாது. பல துறைப் புத்தகங்களையும் வாசிக்கும்போதுதான் ஒருவருடைய வாசிப்பு வளமானது என்று நாம் கூறலாம். இலக்கியம் ஒரு பகுதிதான். வரலாறு, பொதுமக்களுக்கான அறிவியல், வாழ்க்கை வரலாறு, அரசியல், இசை என்று வாசிப்பு பல துறைகளையும் உள்ளடக்கியிருக்கும்போதுதான் நம் உலகம் கொஞ்சம்கொஞ்சமாக விரிவடைகிறது.

முக்கியமான புத்தகங்கள்தான் வாசிப்பா?

ஒருவர் தன் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் நினைவுவைத்துக்கொள்வதில்லை;



ஒவ்வொரு நாளும் விசேஷமான நாளாக அமைவதில்லை. விசேஷ நாட்களை, நம்மைத் தொடும் தருணங்களை மட்டுமே நினைவில் இருத்திக்கொண்டு, அவற்றை நம் வாழ்க்கைப் போக்கின் முக்கியப் புள்ளிகளாகக் கொள்கிறோம். வாசிப்பும் அவ்வாறானதுதான். வாசிக்கும் எல்லாப் புத்தகங்களும் முக்கியமானவை அல்ல; ஆனால், அவற்றின் வழியேதான் முக்கியமான புத்தகங்களை, நமக்கு ஊட்டம் அளிக்கும் புத்தகங்களை, நாம் சென்றடைய முடியும்.

ஒருவர் முக்கியமான புத்தகங்களை மட்டுமே படித்துக்கொண்டிருப்பது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாதது. இன்னொரு பார்வையில், சாதாரணப் புத்தகம் என்பதுகூட அற்பமானது அல்ல. ஒவ்வொரு புத்தகத்தின் மூலமும் உணர்வுகள், மொழி, பண்பாட்டு அடையாளங்கள், உலக நடப்பு என்று பல விஷயங்கள் நமக்குள் பாய்ந்த வண்ணம் இருக்கின்றன. இதை நாம் பிரக்ஞைபூர்வமாக உணர்வதில்லை. இந்த அலைச் செறிவுகள்தான் மேலும் ஆழமான, பன்முகப்பட்ட எழுத்துகளை வாசிக்கும்போது அடிஉரமாகச் செயல்படுகின்றன.

புத்தகங்களை எங்கே வைக்க வேண்டும்?

வாசிப்பு நம் அன்றாட வாழ்க்கையின் அம்சமாக மாற வேண்டுமானால், எப்போதும் நம்மைச் சுற்றிப் புத்தகங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் கண்ணில் படும்படி புத்தக அலமாரியை அமைக்க வேண்டும். புத்தகங்களுக்கு அட்டை போட்டு அடுக்கக் கூடாது. புத்தகங்கள் நம் கண்ணில் படும்படி இருந்தால், நம்மை அறியாமலேயே நம் கவனம் அவற்றை ஆழ்மனதுக்குச் செலுத்தும். இது, நம்மைச் சுற்றி எப்போதும் இசையோ ஓவியங்களோ இருப்பது போன்றது. நாம் வேறு காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும், இசையும் வண்ணங்களும் கலையின் ஒழுங்கும் நம்மை வந்து சேர்ந்துகொண்டேயிருக்கும். வாசிப்பு என்பது புத்தகங்களை ஒரு முறை வாசிப்பது மட்டுமல்ல; மிக முக்கியமான புத்தகங்களை நாம் அடிக்கடி வாசிக்க வேண்டும்.

இப்படி மீண்டும் வாசிப்பது முதல் பக்கத்தில் தொடங்கி வரிசையாகப் படித்துக்கொண்டுபோவது அல்ல. மீண்டும் வாசிப்பது என்பது விட்டுவிட்டு, சில நிமிடங்களே நாம் ஓய்வாக இருக்கும்போதுகூட நிகழ்வது. இப்படி மீண்டும் படிப்பதற்கு, நம் ஆழ்மனம் சில நேரங்களில் நம்மை உந்தும். இது பெரும்பாலும், நம் அன்றாட வாழ்க்கை உணர்வுகளின் போக்குடன் நெருங்கிய தொடர்பைக் கொண்ட புத்தகங்களாகத்தான் இருக்கும் என்பது என் அனுபவம்.

வளமாகும் கணங்கள்

இந்த மாதிரியான நேரங்களில் நாம் நமக்கு மிக முக்கியமாகப் பட்டவற்றையே நாடுவோம், சில வரிகள், சில பத்திகள் போதும் நம்மை அப்புத்தகங்களுடன் இணைக்க. இது ஓர் இசை நம் மனதில் இசைக்கும் நேரங்களை ஒத்தது. அப்போது, நாம் படிப்பது தாகூரின் கீதாஞ்சலியின் சில வரிகளாக இருக்கலாம்; ஜே.கேவின் சில வரிகளாக இருக்கலாம்; ந.முத்துசாமியின் கதைகளாக இருக்கலாம்; அன்டோனியோ மச்சாடோவின் கவிதை, டபிள்யூ.ஜி. செபால்டின் செறிவான மொழி, காம்யுவின் மனச் சலனப் பதிவுகள்ஞ் எதுவாக இருந்தாலும் ஒவ்வொரு முக்கியமான புத்தகமும் நம்முடன் நெருங்கிவந்து நம் வாழ்க்கையின் கணங்களை வளமாக்கச் செய்வதை உணர்வது அற்புத அனுபவம். புத்தக அலமாரியின் முன் நிற்கும்போது மனம் புத்தகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கும் நம் உணர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு.

■



# நிலையாமையே நிலையானது

செல்வம் நிலையற்றது. பொருள் நிலையற்றது. இந்த உண்மையைப் பல தமிழ் நீதிநூல்கள் கூறுகின்றன. இருந்தும் நாம் இன்று இருப்போம், நாளை இருப்போம் என்ற நம்பிக்கையில் நம்முடைய வாழ்க்கையை நகர்த்திக்கொண்டிருக்கிறோம். அதுதான் உண்மை. 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க' என்று கூறிய வள்ளுவர், நிலையாமை என்றொரு அதிகாரத்தையே குறளுள் வைத்துள்ளார். செல்வம் நிலையாமை பற்றியும் உடல் நிலையாமை பற்றியும் அந்த அதிகாரத்திலே அழகாக எடுத்தியம்புகின்றார்.

ஊரிலே ஒரு பெரிய மனிதர் இருப்பார். அவரை அவ்வூர் மக்கள் மரியாதையாக நடத்துவர். அவர் அவ்வூர் மக்களுக்குச் செய்த சேவைகள்பற்றிப் பெரிதாகப் பேசுவார்கள். ஐயா என்றே அழைப்பார்கள். ஆனால் அவர் இறந்துபோனால், ஐயா வந்துவிட்டாரா? என்று கேட்கமாட்டார்கள். உடல் வந்துவிட்டதா? என்றுதான் கேட்பார்கள். அதுபோல, எதுவுமே

சேவைசெய்யாது சுயநலமாக வாழ்ந்தவர் என்றாலும் அவர் இறந்தவுடன் உடல் வந்துவிட்டதா? என்றுதான் கேட்பார்கள். பெரியவராக இருந்தாலும் சரி, சிறியவராக இருந்தாலும் சரி இறந்தால் அவர்களின் உடம்பைப் பிணம் என்றே சொல்வர். பின் அந்த உடலைச் சுடுகாட்டில் எரித்தபின், நீரிலே குளித்து, எல்லாவற்றையும் மறந்துவிடுவார்கள். அதுதான் உலகம். இதை அழகாகத் திருமூலர் ஒரு திருமந்திரச் செய்யுளிலே சொல்கிறார்.

ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

உயிர் இருக்கும்வரைதான் அந்த உடலுக்கு ஒரு பெயர் இருக்கும். பின்னர் அது பிணமாகிவிடும். ஆனால் நன்மை செய்தவர்களுடைய புகழுடம்பு அழிவதில்லை. அது அவர்கள் செய்த தருமம் இருக்கும்வரை நிலைத்திருக்கும். அதனாலேதான் வள்ளுவரும் அன்றறிவாம் என்னாது அறத்தைச் செய்யத் தூண்டுகிறார்.

இறந்தவர் போனபின் இருப்பவர்களுக்கு ஔவையார்ஒரு புத்திமதி கூறுகிறார். இறந்தவர்கள் திரும்பி வருவதில்லை. எமக்கும் ஒருநாள் அதுதான் நடக்கும். ஆகவே, இருக்கும்வரை மற்றவர்களுக்கும் கொடுத்து, உண்டு களித்து வாழுங்கள் என்கிறார் அவர்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

நல்வழி

மரணச் சடங்கிலே, இறந்தவர் மனைக்குச் சென்று பறை கொட்டுவார்கள். இடைவெளி விட்டு, இடைவெளி விட்டுக் கொட்டுவார்கள். பின்னர், உடலைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமானவுடன் மூன்றுமுறை மிகச் சத்தமாகப் பறை கொட்டுவார்கள். உடலைத் துணியால் மூடுவார்கள். நாலுபேர் உடலைச் சுமப்பார்கள். அந்த உடலின் பின்னாலே, பிள்ளைகள் கொள்ளியைக் கொண்டுசெல்வார்கள். இவர்களில் ஒருவர்கூட தம் நிலையை நினைத்துப் பார்ப்பதில்லை. நாளைக்கு நமக்கும் இதே நிலைதானே என்று எள்ளளவும் எண்ணுவதில்லை. இது விந்தையல்லவா? இந்தக் காட்சியை எடுத்துக் காட்டுகிறது ஒரு நாலடியார் பாடல்.

சென்றே எறிப ஒருகால் சிறுவரை
நின்றே எறிப பறையினை நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து

இதிலே 'செத்தாரைச் சாவார் சுமந்து' என்ற அடிதான் நமக்குப் பலத்த அடியாக விழுகிறது. இனிச் சாகப்போகின்றவர்கள், தம்முடைய அந்த நிலையாமையை உணராது, செத்தவர்களைச் சுமந்து செல்வார்கள்.

செல்வமும் வாழ்க்கையும் நிலையற்றவை. இரண்டுமே விரைவில் அழிபவை. எனவே இரண்டும் இருக்கும்போதே நாம் அறம் செய்யவேண்டும். நன்றே செய்க, அதையும் இன்றே செய்க என்று ஆன்றோர் நமக்கு அடிக்கடி சொல்வது இதைத்தான்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்

*343*

என்று வள்ளுவரும் இதையே வலியுறுத்துகின்றார். செல்வம் நிலையில்லாதது. எனவே அதைப் பெற்றால் நிலையான செயலை அந்தச் செல்வத்தைப் பெற்ற அப்பொழுதே செய்துவிடல் வேண்டும். ■

# மகிழ்ச்சி அளிக்கும்

## ஆனந்தமான பயணம்

தமிழ் நாட்டுக்கு வரும்போது
சிறந்த வாகன சேவையை உங்களுக்கு
தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.



தொடர்புக்கு :

**செல்வா**

**தொலைபேசி எண்:**



**9788059977, 9444175825**



**பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க**
**தமிழகத்திலிருந்து உங்களுக்குத் தேவையான புத்தகங்களை**
**ஒரு கிழமையில் பெற்றுத் தருவோம்**

எங்களிடம் தற்சமயம் உள்ள புத்தகங்கள்

1. அபிராமி, அந்தாதி - கிவா. ஜகந்நாதன் உரையுடன்
2. அதிஷ்ட விஞ்ஞானம் - சேதுராமன்
3. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்
   10 பாகங்களுக்கு ஒரே புத்தகம்.

தொடர்புக்கு:

**தமிழர் தகவல்,**
லண்டன்.

# ஆன்மிகவாதிகளுக்கு
## அரிய சந்தர்ப்பம்

**தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?**



### திருவிழா - சுற்றுலா

ஆடிமாதம் 5ம் திகதி புறப்பட்டு ஆடி 15ம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - ஆடி 10 திகதி ஞாயிற்றுக்கிழமை சிதம்பரம் ஆனி உத்தரம் தேர் திருவிழாவும் - ஆனி உத்தரம் நடராஜனின் அபிஷேகமும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், திருவண்ணாமலை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.















லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA




**நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்**







லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA







நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்



மீண்டும்
புதுபொலிவுடன்
**MITHUS**

## MITHUS Jewellers

322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

# SUN MOTORS

**TEL: 02086920232**



**Mechanical / Body Repairs / Recovery / Tyres**

R/O 26 LOAMPIT Hill
Elswick Road, Lewisham
London, SE13 7SW

# Rathy Jewellers Ltd



**Opening Hours**
**Mon-Sat 10 am to 6.30 pm**
**Sun 12 Noon to 6.30 pm**

எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்

*The Leading Jewellery Store in London with the Largest Selection including Diamond Jewellery, Thaali Kodi and all Studded Jewellery*

**WEMBLEY BRANCH**
**28 Ealing Road, Wembley**
**Middlesex HA0 4 TL, 020 8903 3063**
**TOOTING BRANCH**
**209 Upper Tooting Road**
**Tooting SW 17 7TG, 020 8682 2233**

எங்களிடம் வரும் பழைய நகைகள் புதுப்பிக்கப்பட்ட
பின்னர் தான் மீளத் தயாரிக்கப்படுகிறது அதனால்
எல்லா நகைகளுக்கும் 22கரட் சரியாக இருக்கும்

**லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA**













நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்




*ஆரெம்கேவியின் டிசைன் ஸ்டூடியோவில் கைதேர்ந்த நெசவாளர்களால்,
உரிமம் பெற்ற தொழில் நுட்பத்தில் (Patented* Techniques) உருவாக்கப்பட்ட உயர்ந்த படைப்புகள்.

சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி,
ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்.
கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு.
திருநெல்வேலி - வண்ணார்பேட்டை, வடக்கு ரத வீதீ, திருநெல்வேலி டவுண்.
பெங்களூரு - ஒரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com

# OPENING SOON

# FOOD WORLD

Asian - European - English - Indian - Sri Lankan
Afro Caribbean - Polish - Afghani - Albanian - Hungarian
Mauritian - Pakistani - Korean - Chnese - Turkish - Thai

- ✓ லண்டன் மாநகரில் முதல் முறையாக அதிபிரம்மாண்டமான முதல் தமிழ் சூப்பர் ஸ்டோர்
- ✓ உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்தும் இதுவரை எங்கும் கண்டிராத அதி விஷேட மலிவு விற்பனையில் இங்கு கிடைக்கும்.
- ✓ இங்கு 40க்கும் மேற்பட்ட இலவச கார் பார்க்கிங் வசதி உண்டு.

**Opening Times**

**Mon to Sat - 7am to 10pm** | **Sunday - 11am to 5pm**

**Tel : 0208 6400 511, foodworld.co.uk**




Top-up your SIM online or where you see the following signs:

TESCO Sainsbury's ASDA WHSmith Martin McColl

Customers should opt-in by texting SAVE to 2525 to be eligible to get the special rates, Customer who did not opt-in will be charged at standard rates. Opt-in save promotional tariff is valid from 25.02.2015. Customers with India 1p/min promotion ( top up offer) should not opt-in to this special rates. If you opt-in to this promotion, you will not be able to avail India special rates.Promotional tariff valid for 30days from the Opt-in. Lycamobile reserve the right to amend or vary the terms of this promotion, or to withdraw the plan at any time on reasonable notice. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01,02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Allowances are valid for 30 days from the date of purchase. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. In bundle data usage is rounded up and charged in 1KB increments. Once the data allowance of a bundle has been fully used, additional data usage will be charged at standard rate. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: The offer is valid from 09.03.2015.

Lyca mobile
Call the world for less